www.tamilarangam.net

எண் 2 இல.9 15.7.84



# பஞ்சாப் கிளர்ச்சி

# எதுவரை...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஆசிரியர் கருத்து: ஏகாதிபத்தியத்தின் ஜனநாயக வேடம்!

வருடக்கணக்காக தமிழ் மக்கள் புரிந்துகொள்ளத்தவறிய விடயங்களை இன்று குறுகிய காலங்களில் புரிந்துகொள்ளக்கூடிய அளவுக்கு சம்பவங்கள் துரிதகதியிலே நடந்துகொண்டிருக்கின்றது. காலாகாலமாக பிற்போக்குவாத, மாறு நிலை மனோபாவமுடைய தமிழ் சமுதாயத்தின் இளம் சிறார்கள் போராட்டக்களத்திலே ஏகாதிபத்தியத்தின் சதிகளை முகங்கொடுத்து முன்னேறிக்கொண்டிருக்கிறார்கள். வரலாற்றின் நியதியானது தமிழ் மக்களை கம்யூனிச விரோத திரைகளை களையவைத்து மார்க்ஸியத்தின்பால் தள்ளிவிட்டது. புரட்சிகர சித்தாந்த ஆயுதமேந்தி மட்டுமே தமிழ் ஈழத்தின் பகைவர்களை ஏகாதிபத்திய சதிகாரர்களை, ஜனநாயக வேடதாரிகளை தமிழ் மக்கள் வெல்லமுடியும் என்ற நிலை இன்று உருவாகிவிட்டது.

அமெரிக்க ஜனநாயகத்தின் மேல் காதல்கொண்ட நடுத்தர வர்க்க தமிழ் சமுதாயம் மார்க்சியத்திலிருந்து விவாகரத்தெடுத்திருந்த காலங்களிலே இலங்கையில் நடந்த எந்தவிதமான தொழிற்சங்கப் போராட்ட நடவடிக்கைகளிலோ முற்போக்கு நடவடிக்கைகளிலோ ஐக்கியப்பட்டு போராடியது கிடையாது. 1970ம் ஆண்டு தேர்தலில் இடதுசாரி ஐக்கிய முன்னணியானது தனது தேர்தல் விஞ்ஞாபனத்திலே இஸ்ரேல் தூதரகத்தை வெளியேற்றுவோமென அறிவித்து அதற்காக ஒடுக்கப்பட்ட மக்களிடம் அறைகூவல் விட்டபோது தமிழ் மக்கள் தமது குட்டி முதலாளித்துவ வர்க்க வாஞ்சையில் ஈடுபட்டு தமிழ் அரசுக்கட்சிக்கும், தமிழ் காங்கிரஸ் கட்சிக்கும் கூட்டங்கள் ஏற்பாடு செய்து தோரணங்கள் கட்டிக்கொண்டிருந்தார்கள். தேர்தலில் வெற்றிபெற்ற இடதுசாரி ஐக்கிய முன்னணி இஸ்ரேல் தூதரகத்தை வெளியேற்றியபோது ஒடுக்கப்பட்ட முஸ்லிம் மக்களுக்கும் தொழிலாள வர்கத்திற்கும் அதுவே ஒரு திருநாளாக அமைந்தது. தமிழ் மக்கள் பக்கத்து வீட்டில் விருப்புப்பார்க்க வேலி ஓட்டையை பெரிதாக்கிக்கொண்டிருந்தார்கள்.

இன்று சர்வதேச ரீதியாக ஜனநாயகத்தின் முகமூடிகள் கிழிக்கப்பட்டு வருகின்றன. 1982 செப்டம்பரிலே நிராயுதபாணியான பாலஸ்தீனியர்களை நவீன ஆயுதம்கொண்டு வேட்டையாடிய அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஏவல் நாய்யான இஸ்ரேல், மேற்கொண்டு ஜனநாயகம் பற்றி பிதற்றுவது இயலாத காரியமாகிவிட்டது. இன்று நிக்கரகுவாப் புரட்சியை முறியடிக்க அமெரிக்க ஏகாதிபத்தியம் எடுத்துவரும் அதி கீழ்த்தரமான சதிகளின் மத்தியிலும், தமிழீழ போராட்டத்தை வேரோடு களைய ஜயவர்த்தன அரசிற்கு வாரிவழங்கியிருக்கும் இராணுவத் தளபாடங்கள், இராணுவ ஆலோசனைகள் மத்தியிலும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஜனநாயக வேடம் காற்றிலே பறக்கின்றது.

உலகின் ஒடுக்கு முறையாளர்கள், நமது தேசத்தின் பகைவர்கள் இன்று வெளிப்படையாகவே " பயங்கரவாதிகளை ஒழிக்கவென்று இலங்கை வந்திருக்கிறார்களாம் ". இஸ்ரேலின் நலன்காக்கும்பிரிவு அமெரிக்கதூதராலயத்தின் ஓர் பகுதியில் இடம்பெற்று இயங்க அனுமதி கொடுக்கப்பட்டதுபற்றி ஜனாதிபதி ஜயவர்த்தனா இவ்வாறே கூறியுள்ளார்.



தமிழ்த்தீவிரவாதிகளை ஒடுக்குவதற்கான தயாரிப்பாக இதைக்காணுமுன் - முழு ஒடுக்கப்பட்ட மக்களையும் மேலும் சுரண்டி தமது பொருளாதார பொறிவின் சுமையை ஏழை மக்களின் முதுகில் ஏற்றும் ஏகாதிபத்தியத்தின் சதியாக இதனை ஒடுக்கப்பட்ட சிங்கள, முஸ்லீம் மக்கள் கண்டுகொண்டனர்.

இதன் வெளிப்பாடாகவே முஸ்லீம் மக்களின் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களும், கூட்டங்களும், எதிர்ப்பு நடவடிக்கைகளும் அமைந்தன. இதைத்தொடர்ந்து கல்முனை, அம்பாறை, மட்டக்களப்பு, பெறதெனியா, பொலநறுவை பொலிஸ் நிலையங்கள் தாக்குதலுக்குள்ளாகின. கிளிநொச்சி வங்கி கொள்ளையடிக்கப்பட்டது. இஸ்ரேல் இராணுவ ஆலோசகர்கள் தங்கியிருந்த ஹோட்டல் ஒபரோய்க்கு குண்டு வீசப்பட்டது. தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலியின் காரியாலயத்திற்கு குண்டு வைக்கப்பட்டது.

இலங்கையில் வட, கிழக்குப்பகுதியில் மட்டுமே கடந்த தசாப்தத்தில் நிலவிவந்த அரச எதிர்ப்பு நடவடிக்கைகள், கொரிலா தாக்குதல்கள் நாடு தழுவிய மட்டத்தில் நடக்க ஆரம்பித்துள்ளன.

இந்திராகாந்தியும், ஜயவர்த்தனாவும் நேரில் சந்தித்தபோது இந்திராகாந்தி அவர்கள் இலங்கை அரசாங்கம் பிரித்தானிய எஸ்.ஏ.எஸ் **S.A.S,** இஸ்ரேலிய மொசாட் நிபுணர்கள் இலங்கையில் இராணுவ ஆலோசனைகள் வழங்கி வருகிறார்களா என ஜயவர்த்தனாவை வினவியுள்ளார். இந்த உண்மையை ஜயவர்த்தனா மறுத்துள்ளார்.

இலங்கையில் அரசியல் நெருக்கடிகள் உபகண்ட அரசியலின் தலைவிதியை நிர்ணயிக்கும் சக்தியுடன் நடந்துகொண்டிருக்கின்றது. 1971 ஏப்பரல் கிளர்ச்சியின் பின்னர் இலங்கையைப் பொறுத்தவரையில் தமிழ் தேசியவாதிகளே புரட்சிப் புயலைக்கிளப்பி விட்டுக்கொண்டிருக்கிறார்கள். தமிழ் ஈழ போராட்டமானது புரட்சியின் ஈர்ப்பு மையமாகிவிட்டது.

இந்தநிலையிலே ஏற்கனவே ஆயுதம் தாங்கிய தமிழ் தேசியவாதிகள் தென்னிலங்கைத் தொழிலாள வர்க்க கட்சிகளையும், முற்போக்கு சக்திகளையும் ஆயுதபாணியாக்கும் பொறுப்பினை ஏற்கவேண்டும்.

இன்று பொலநறுவை, பெரதெனியா பொலிஸ் ஸ்ரேசன்களைத் தாக்கிய தென்னிலங்கையின் ஒடுக்கப்பட்ட மக்கள் ஸ்தாபன ரீதியாக திரண்டெழுந்து திட்டமிட்ட நுணுக்கமான இராணுவ நடவடிக்கைகளை தமிழ் தேசியவாதிகளுடன் கலந்தாலோசித்துச் செய்வதனால் மட்டுமே ஏகாதிபத்திய ஏவல் நாயான ஜயவர்த்தனாவின் ஆட்சியை தூக்கியெறிய முடியும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மத்திய, தென் இலங்கையில் இவ்வாறு ஸ்தாபனப்படுத்தப்பட்ட தொழிலாளர் வர்க்கக்கட்சி அல்லது முற்போக்கு அணியொன்றே தமிழ் ஈழம் பிரிந்து செல்வதை ஏற்பதுடன் தமிழ் ஈழத்தின் எல்லைகளுக்கப்பால் வாழும் மலையகத் தமிழர்களுக்கும் தென்னிலங்கைத் தமிழர்களுக்கும் பாதுகாப்புக்கு உத்தரவாதம் செய்த வாழ்க்கையை ஏற்படுத்திக்கொடுக்க முடியும்.

எனவே, இன்று உடனடியாக தமிழ் தேசியவாதிகள் தென்னிலங்கையில் புரட்சிகர சக்திகளின் பக்கம் தமது கவனத்தை திருப்பவேண்டும். இது சடத்துவ, தத்துவ கால்வாய்களினூல் பாயும்போதுமட்டுமே யூ.என்.பி அரசாங்கமும் ஏகாதிபத்தியமும் தோற்கடிக்கப்படும்.

## இஸ்ரேல்... இஸ்ரேல்...

அமெரிக்க பிரித்தானிய விபச்சாரத்தால்
ஐ.நா.வில் பிறப்பெடுத்த கொள்ளை நோயே
மத்திய கிழக்கில் மக்கள் மென்னிகள்
அறுப்பதில் இவனோர் கசாப்பு காரனே
பாலஸ்தீன மக்களின் வாழ்வை
கருச்சிதைவு செய்யும் சியோனிச அரிவாளே
நாகரீக வரலாற்று ஏட்டேக்களை
இரத்தக் கறைகளாலும் மண்டை ஓடுகளாலும்
அழித்து எழுதிய அரக்கப் பிறவியே
அராபிய மக்களின் அவலம் நீயே
உன் கறுப்புக் கரங்களால்
எம் உடன் பிறப்புகள்
பாலஸ்தீனர் சுதந்திரப் பிரியர்கள்
பட்ட கொடுமை
போதாதென்று எண்ணியோ
இலங்கை மண்ணில் காலை பதித்து
பயங்கரவாதம் ஒழிக்க வருகின்றாய்
67 இலே மத்திய கிழக்கில்
முடி சூடா மன்னனாய் திகழ்ந்தவன் நீதான்
இன்று 84 இலும் கூட
உனது இராணுவ வல்லமைக்கு நிகர் கிடையாது
ஒடுக்கப்பட்ட மக்கள்
பஞ்சாய் இருந்து எரிபட்ட காலம் போய்

இன்று இரும்பாய் மாறி கடிக்கின்ற காலமாய்
உரம் பாய்ந்த வலிய சிந்தனையுடன்
உன்னையும் உன் அமெரிக்க தலைமையையும்
உருட்டிச் சரிக்கும் உள உறுதியுடன்
உழைக்கின்ற இவ் வேளையில்
நாம் சற்று உரக்கவே சொல்லுகின்றோம்
உன் நெருப்புப் பாதங்களால் நீறான
பூகோள வரையிலே
தமிழ் ஈழத்தை தாரை வார்த்திட
எம்மக்கள் தயாராயில்லை
நேற்று வரை நடந்த
பூனைச் சீறலாய் மக்கள் சீற்றம்
இனித் தணியாது - நாளை
ஸ்தாபனப் பட்ட பலமான அமைப்பாய்
எம்மக்கள் போராட்டம் உரம் பாய்ச்சப்படும்
அவ்வேளை
நீயும் உன் அமெரிக்கத்தலையும்
ஈழ மண்ணில் மட்டுமல்ல
பூகோளத்தின் மூலைமுடுக்கெங்கும்
ஒடுக்கப்பட்ட மக்களின்
கொப்பளிக்கும் விழிகளாலும் துடிக்கும்கரங்களாலும்
நிர்மூலமாக்கப் படுவீர்கள்
நிர்ணயம் எடுப்போம் தோழர்களே.





# பஞ்சாப் கிளர்ச்சி

மிகச் சிக்கல் நிறைந்த, ஒரு வரலாற்றுக் காலகட்டத்திலே நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இரண்டு வருடங்களுக்கு முன்னால் "காலிஸ்தான்" என்ற பெயரையே எண்ணாத சீக்கியர்கள் இன்று தமது இரத்த வெள்ளத்தால் "காலிஸ்தான்" (தூயபூமி) கோரி இந்திய அரசுக்கெதிராக கிளர்ந்தெழுந்துள்ளது மாத்திரமல்ல சீக்கியர்களின் தீவிரவாத தலைவர்கள் ஆயிரத்துக்கு மேற்பட்டோர் சுட்டுக் கொல்லப்பட்டதுடன் இத் தீவிரவாதிகளின் தலைவரான பிந்திரன்வாலே (BHINDRANWALE) இந்தியஇராணுவத்தால் கொல்லப்பட்டார். (இவரை இந்திய இராணுவத்தினர் கைதுசெய்ய முயன்றபோது இவர் தற்கொலை செய்து கொண்டதாகவும் செய்திகள் கூறுகின்றன)

அஸாமில் சந்தித்த இரத்தக்களரியால் ஏற்பட்ட கறையைப் போக்கிக்கொள்ள முன்னரே இந்திய அரசாங்கமானது சீக்கியர்களின் கிளர்ச்சிகளை நசுக்க மிருகத்தனமாகச் செயற்பட்டுள்ளதுடன் "காலிஸ்தான்" பற்றி அதிகமாக அலட்டிக்கொள்ளாத சீக்கியர்களையும் பிரிவினைப் பக்கமாக சிந்திக்கத்தூண்டியுள்ளது.

காலிஸ்தான் கோரி சீக்கியத் தீவிரவாதிகள் நடாத்தும் போராட்டங்களுக்கு பின்னணியில் வெளிநாட்டுச் சக்திகள் இருப்பதாக இந்திரா காந்தி அரசாங்கம் தொடர்ச்சியாக பாராளுமன்றத்துள்ளும் வெளியேயும் கூறிவந்துள்ளது. இந்திராகாந்தி அரசாங்கம் குறிப்பிட்ட வெளிநாட்டுச் சக்திகள் என்பது அமெரிக்க ஏகாதிபத்தியமும், சீன மேலாண்மையுமாகும்.

அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கும், இந்திய தேசிய முதலாளித்துவத்திற்கும் இடையேயான முரண்பாடு மிகவும் வெளிப்படையானது. இந்திய பாகிஸ்தான் போரானது 1971ல் நடைபெற்றபோது இந்திய அரசை பணியவைப்பதற்காக வங்காளவிரிகுடாவிற்கு அமெரிக்கா தனது 7வது கடற்படையை அனுப்பும் மட்டத்திற்கு இம் முரண்பாடு வளர்ச்சியுற்றது. பாரிய தேசமான இந்தியாவைதமது சந்தை மண்டலத்திற்குள் கொண்டுவர அமெரிக்க ஏகாதிபத்தியம் எடுக்கும் பகீரதப்பிரயத்தனங்கள் இந்திய தேசிய முதலாளித்துவ அரசினைச்சுற்றி ஒரு நச்சு வட்டத்தை ஏற்படுத்தியுள்ளது.

பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபால், இலங்கை போன்ற நாடுகள் இந்திய உபகண்டத்தின் எதிர்ப்புரட்சி அரண்களாகி விட்டன. இந் நாட்டு அரசாங்கங்கள் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கைப்பொம்மைகளாகும். மறு புறத்தில் இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையேயான உறவுகளில் ஏற்பட்ட விரிசல் நேருவின் காலத்தில் இருந்ததைவிட இன்று அதிக இடைவெளியை ஏற்படுத்தியுள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மதத்தாலும், இனத்தாலும் மக்களைப் பிரித்தாளும் ஆட்சி ஏகாதிபத்தியத்திற்கு புதியதல்ல. சுரண்டப்படும் மக்களின் கவனங்களை மதவாதத்திலும், இனவாதத்திலும் திசைதிருப்பி சுரண்டப்படும் மக்களுக்கிடையில் குளறு




சீக்கியர்களின் "காலிஸ்தான்" போராட்டம். இடம் ஸ்ருட்காட்

படிகளை ஏற்படுத்தி தமது சுரண்டலை வலுப்படுத்தும் உபாயமானது நவீன காலனித்துவத்தின் தீர்க்கமான வெளிப்பாடாகும்.

சீக்கியர்களின் " காலிஸ்தான் " போராட்டத்தில் அமெரிக்க ஏகாதிபத்தியம் வகுத்துக்கொண்ட தந்திரோபாயமானது இதுவேதான். சீக்கிய மதவாதத்தை பஞ்சாபியர்கள் மத்தியிலே பாச்சலில் வளரவிட்டு சீக்கிய மதம் இந்து மதத்தின் ஒரு பிரிவானதென்று இந்திய அரசியல் சட்டத்தில் இடம்பெற்ற வாக்கியங்களை நீக்கி சீக்கியர்கள் தனிமதத்தைச் சார்ந்தவர்கள் எனப் பிரகடனப்படுத்த வேண்டுமென எழுந்த கோரிக்கையே பின்னர் சீக்கியர்களுக்கான தனியான ஆட்சி வேண்டும் – காலிஸ்தான் வேண்டுமென்ற கோரிக்கை மட்டத்திற்கு உயர்ந்து சென்றது.

இந்திராகாந்தி அடிக்கடி குறிப்பிட்டது போல இந்திய அரசுக்கு எதிரான சதித் திட்டங்களை தீட்டுவதிலே அமெரிக்க ஏகாதிபத்தியம் சளைக்காது செயற்பட்டுத்தான் வந்திருக்கிறது. தீவிரவாத பஞ்சாபியர்கள்



மேல் இந்திய இராணுவம் மேற்கொண்ட தாக்குதலின் பின்னர் சீக்கியர்களின் புனித நகரான அம்ரிஸ்தாரிலுள்ள பொற் கோவில் (GOLDEN TEMPLE) உள்ளேயிருந்து கத்தைகத்தையான டொலர்களும், பாகிஸ்தான், சீனாவில் செய்யப்பட்ட இயந்திரத் துப்பாக்கிகளும் வெடி மருந்துகளும், ராக்கட்டுகளும் கண்டுபிடிக்கப்பட்டன.

இவை சீனாவினதும், அமெரிக்க ஏகாதிபத்தியத்தினதும் எதிர்புரட்சி தயாரிப்பின் வெளிப்பாடுகளாகும். இதில் அமெரிக்க ஏகாதிபத்திய சார்பில் பங்கெடுத்துக்கொண்டநாடு பாகிஸ்தானாகும்.

காலிஸ்தான் போராட்டமானது இந்தியாவின் ஸ்திரத் தன்மையை குலைப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட ஏகாதிபத்தியச் சதிமட்டும்தானா என்பதையே நாம் ஆராய வேண்டிய பிரச்சனையாகும். இதை ஆராயவேண்டின் இந்திய தேசியமுதலாளித்துவத்தின் பிற்போக்கானதும், முற்போக்கானதுமான குணம்சங்களை ஆராய வேண்டும்.

இந்தியாவில் கோடிக்கணக்கான மக்கள் பஞ்சத்தாலும், பசியாலும் வாடிக்கொண்டிருக்கிறார்கள். உழைக்கும் சக்திபடைத்த மக்கள் கோடிக்கணக்கிலேயுள்ள இந்தியாவிலே இம் மக்களின் உழைக்கும் சக்தியானது வீணாகிக்கொண்டிருக்கிறது. காரணம் வேலையில்லாத் திண்டாட்டமாகும்.

கையெழுத்தே போடத்தெரியாத மக்கள் கூட்டமும், சுகாதார வசதியில்லாத சேரிகளும், வீடில்லாது தெரு ஓரத்தில் ஒதுங்கும் நிலைமைகளுமுள்ள இந்தியாவின் எதிர்காலம் இன்றுள்ள தேசிய முதலாளித்துவத் தலைமையினால் தீர்த்துவைக்கப்பட முடியாததாகும் என்பதையே 1947ல் சுதந்திரம் பெற்ற இந்தியாவின் 37 வருட வரலாறு காட்டிச் சென்றுள்ளது. இதனால் இந்திய அரசாங்கத்தின்மேல் மக்கள் வெறுப்புறுவதும் இந்திய அரசிற்கெதிராக கிளர்ந்தெழுவதும் இயங்கியல் ஆகும். மக்கள் தமது உழைப்புச் சக்தியை செவ்வனே பிரயோகித்து அதன் மூலம் தமது வாழ்க்கை நிலைமைகளை மேம்படுத்திக்கொள்ளும் அவாவுள்ளவர்களாகும்.

சீக்கியர்களுக்கு இந்திய அரசாங்கத்தின் மேல் ஏற்படும் அதிருப்திக்கான முக்கிய காரணம் சீக்கிய மக்களின் வாழ்க்கைத் தரம் உயராமையேயாகும். தேசிய எல்லையை உடைத்து சர்வதேச சந்தை மட்டத்திற்கு இந்திய தேசிய முதலாளித்துவம் வளர்ச்சியடையாது விட்டதன் காரணமாகவே இந்திய மக்களின் வாழ்க்கைத்தரம் முதலாளித்துவ சமுதாய அமைப்பின் கீழ் முன்னேறவில்லையாகும்.

சர்வதேச அரங்கிலே இந்திய தேசிய முதலாளித்துவம் ஏகாதிபத்தியத்துடன் முட்டிமோதி தன் சந்தை நிலைமைகளை விருத்தி செய்வதில் தொடர்ந்து தோல்வியையே கண்டுவந்துள்ளது. தொழிற்புரட்சி நடந்த நாடுகளில் விஞ்ஞான தொழிநுட்பமும், சந்தையை பகிர்ந்துகொள்வதில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மேற்குத்தேய முதலாளித்துவ நாடுகளுக்கிடையேயான ஒப்பந்தங்களும் — கூட்டுக்களும் இந்திய தேசிய முதலாளித்துவத்தின் வளர்ச்சியின் முன்னால் உள்ள இராட்சத பிரச்சினைகளாகும்

இதன் காரணமாகவே இந்திய தேசிய முதலாளித்துவத்தின் வளர்ச்சி வீதமும் இதன் பிரதிபலிப்பான இந்திய மக்களின் வாழ்க்கைத்தர வளர்ச்சி வீதமும் இன்று நிலவும் சர்வதேச உற்பத்தி – விநியோக முறைகளின் மத்தியிலே மிகக்குறைவாக, நத்தை வேகத்தில் கூடிக்கொண்டு செல்கிறது.

மறுபுறத்திலே இந்திய மக்களின் வாழும் அபிலாசைகள் நாகரீக உலகின் வளர்ச்சியுடன் சார்வு ரீதியாகக் கூடிக்கொண்டே செல்கின்றது. இந்திய மக்களினது வாழ்க்கைத்தரமானது கடந்த நாற்பத்தியேழு வருடகால ஆட்சியில் குறிப்பிடத்தக்க அளவு உயராமையால், மக்கள் இயல்பாகவே அரசாங்கத்தின் மேல் அதிருப்தி கொண்டுள்ளனர். இதன் வெளிப்பாடுதான் சீக்கியர்களின் "காலிஸ்தான்" போராட்டமாகும்.

இந்திய தேசிய முதலாளித்துவத்தின் இயலாமையை மக்கள் தமது நாளாந்த வாழ்வில் கண்டுகொண்டும் அதன்மேல் அதிருப்தி அடைந்துகொண்டும் சென்றாலும்கூட இந்திய தேசிய முதலாளித்துவத்தின் தலைமைக்கு சவால் விட்டு புதியதொரு புரட்சிகர தலைமை – உழைப்பாளி மக்களின் சக்தியிலே அடித்தளம் அமைத்த தலைமையொன்று பெருமட்ட வெகுஜன அறைகூவலுடன் இன்றுவரை தோன்றவில்லையாகும். இதன் காரணமாகவே இந்திய மக்கள் இந்திரா காங்கிரசுக்கும், ஜனதாவிற்கும், அகாலிதள்விற்கும் மாறிமாறி அலைந்து தங்களது பிரச்சினைகளை இக்கட்சிகளில் ஏதாவதொன்று தீர்த்துவிடாதா என அங்கலாய்க்கின்றார்கள்.

இன்று இந்தியாவிலே தோன்றியுள்ள தேசியவாதத்திற்கும், மதவாதத்திற்குமான நச்சு வேர்களை அடியோடு பிடுங்கியெடுக்கவல்லது ஓர் சோசலிச புரட்சியாகும். இந்தி அரசாங்கத்திற்கும், அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கும் இடையேயான வெளிப்படையான முரண்பாட்டின் காரணமாக இந்திய தேசிய முதலாளித்துவத்தின் முற்போக்கான இக் குணாம்சத்தை மட்டும் கருத்தில் கொண்டு சீக்கியர்களின் போராட்டத்தை வெறும் பிற்போக்கானதாக கணித்துவிட முடியாது.

இன்று பஞ்சாப்பிலே ஏற்பட்டுள்ள தேசிய வாதமானது நாளை இதர மாநிலங்களிலும் ஏற்படத்தான் போகின்றது. நான் "இந்தியன்" என்று சொல்வதில் பெருமைபெற்றுக் கொள்ளும் மக்கள் அப் பெருமை கிட்டுவதற்காக பசிகிடக்கப்போவது கிடையாது. இதன் காரணமாகவே நான் " இந்தியன் " என்பதில் நின்று விலகி மக்கள் நான் " சீக்கியன் " என்றும் நான் " காஷ்மீரியன் " என்றும் " நான் தமிழன் " என்றும் சிந்திக்கத் தொடங்கிவிட்டான்.



இத் தேசிய இனங்களுக்கிடையேயான உராய்வையும், மதங்களுக்கும் சாதிகளுக்குமிடையேயான உராய்வையும் முடிவுக்குக் கொண்டுவரவேண்டுமேயானால் இந்தியாவில் மேலும் பல பாரியதொழிற்சாலைகள் நிர்மாணிக்கப்பட்டு உற்பத்திச் சக்திகள் வளர்த்தெடுக்கப்பட்டு சுரண்டுகின்ற தனியுடைமைகள் சமுதாய உடமையாக்கப்பட்டு உற்பத்தி பாச்சலில் கூடவேண்டும். இன்றுள்ள இந்திய தேசிய முதலாளித்துவ தலைமையானது இதைச் செய்ய வலுவற்றதென்பதை நாம் மேலே ஏற்கனவே விளக்கியுள்ளோம். இது ஓர் புதியதலைமையின் கீழே ஓர் சோசலிச புரட்சியின் வாயிலாகவே சாத்தியமாகும்.

தமிழ் இனத்தின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் தமிழ் ஈழ விடுதலை இயக்கங்கள் " காலிஸ்தான் " போராட்டத்தில் தங்களது நிலைப்பாட்டை வகுத்துக்கொள்வதில் பல தடைகள் இருக்கத்தான் செய்கின்றன. இந்திய தேசிய முதலாளித்துவமானது தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்திற்கு இன்றுவரை தடையாகச் செயற்படாதது மாத்திரமல்ல தமிழ் நாடு அரசாங்கம் தமிழ் ஈழ விடுதலையில் காட்டும் அக்கறையில் ஓர் மாறுபாடான போக்கை என்றுமே கொண்டிருக்கவில்லை.

83 யூலை இனக்கலவர நாட்களிலே இந்திய அரசாங்கம் வெளிநாட்டு அமைச்சர் நரசிம்மராவை இலங்கை அனுப்பியதும், பின்னர் வட்டமேசை மாநாட்டுக்கு பார்த்தசாரதியை பிரதிநிதியாக வைத்து ஏற்பாடு செய்ததும், பின்னர் சுன்னாகத்தில் ஆகாயப்படையினரின் அட்டகாசத்திற்கு வருத்தம் தெரிவித்து இலங்கை அரசாங்கத்தைப் பகைத்துக்கொண்டதுமாக இந்திய மத்திய அரசாங்கம் தமிழீழ போராட்டத்தில் குறைந்தபட்ச வாஞ்சையோடாவது நடந்துகொண்டிருக்கிறது.

இதேவேளையிலே மூன்றாவது உலக யுத்தத் தயாரிப்பின் சதியிலே மூழ்கி சதியில் ஓர் அங்கமாக விளங்கும் இலங்கையின் யூ.என்.பி அரசாங்கமானது இந்திய தேசியமுதலாளித்துவத்தை ஆத்திரமூட்டும்வகையிலே நடந்து வருவதுடன் பிரதம மந்திரி தொடக்கம் எம்.பிக்கள் ஈறாக வெறித்தனமான தேசிய வாதத்தை மக்களுக்கு மத்தியில் போதித்து வருகின்றனர்.

இந்நிலைமைகளின் காரணமாக தமிழ் மக்களுக்கு இந்திய அரசாங்கத்தின் மேலும் குறிப்பாக இந்திராகாந்தி, கருணாநிதி, எம்.ஜி.ராமச்சந்திரன் ,நெடுமாறன் மற்றும் இன்னோரன்ன தலைவர்களின் மேலும் மதிப்பும் மரியாதையும், வாஞ்சையும் ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக சீக்கியர்களின் காலிஸ்தான் போராட்டத்தை ஜீரணிக்கத் தமிழ் மக்கள் கஷ்டப்படுவதும், தமிழ் ஈழ விடுதலை இயக்கங்கள் கஷ்டப்படுவதும் மிகவும் இலகுவாக புரிந்துகொள்ள கூடியதுதான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதிலும் குறிப்பாக சீக்கிய தீவிரவாதிகளின் பின்னால் அமெரிக்கா சீனா, பாகிஸ்தான் போன்ற வெளிநாட்டு சக்திகள் இந்தியாவிலே குழப்பம் விளைவிக்கும் நோக்கத்துடனும் இந்தியாவைத் துண்டாடி, இந்தியவை பலவீனப்படுத்தி, இந்திய மக்களை மேலும் ஒட்டச்சுரண்டும் மூலோபாயத்தோடும் நடந்துகொண்டார்கள் என்று அறியும்போது தமிழ் மக்கள் இயல்பாகவே இந்திய அரசாங்கத்தின் நடவடிக்கைகளை ஆதரிக்கும் வகையிலேயே சிந்திப்பதும் - பேசுவதும் நாம் விளங்கிக்கொள்ளக் கூடியதும் எதிர்பார்க்கக் கூடியதும்தான்.

ஏகாதிபத்தியத்தின் சதிகளுக்கு இந்திய மக்கள் பலிக்கடாக்களாக்கப்படக்கூடாது என்பதில் நாமும் உறுதியாகத்தான் இருக்கின்றோம். ஆனால் ஒரு சுயநிர்ணய உரிமை சம்பந்தப்பட்ட பிரச்சனையில் நாம் நிபந்தனையில்லாது சுயநிர்ணய உரிமைகோரும் அவ்வினத்தை ( சீக்கியரை ) அங்கீகரிக்க வேண்டிய கடமைப்பாடு உடையவர்களாகின்றோம்.

காலிஸ்தான் போராட்டத்திலே ஏற்பட்டுள்ள முரண்பாடானது சுயநிர்ணய உரிமை கோருகின்ற இனத்தின் தலைமையானது ஏகாதிபத்திய சூழ்ச்சியில் அகப்பட்டுக் கொண்டதால் ஏற்படும் முரண்பாடாகும். அதிலும் குறிப்பாக மதவெறியில் ( RELIGIOUS FANATISM ) அடித்தளம் அமைப்பதால் இதன் பிற்போக்குக் குணாம்சமானது இவர்களது சுயநிர்ணய உரிமை என்ற தூய கோரிக்கையில் மாசு பிறப்பிக்கின்றது.

தமிழீழ சர்வதேசசம்பந்தக்குழுவாகிய நாம் சீக்கிய மக்களின் போராட்டத்தை நிபந்தனையில்லாது அங்கீகரிக்கின்ற அதேவேளையில் பெரும்பான்மையான சீக்கியர்கள் பிரிந்துசென்று காலிஸ்தான் அமைப்பதை விரும்பினால் அவர்களுக்கு பிரிந்துசெல்லும் உரிமையுடன்கூடிய சுயநிர்ணய உரிமை வழங்கப்பட வேண்டுமென்பதில் உறுதியாய் இருக்கின்றோம்.

ஆனால் இப்பிரிந்து செல்லும் இனத்தின் தலைமையானது ஏகாதிபத்திய கைப்பொம்மைகளால் வழிநடத்தப்படக்கூடாது. சீக்கிய மக்கள் இப்பேற்பட்ட தலைமையின்கீழ் அணிவகுக்கப்படுவதால் அவர்களின் "காலிஸ்தான்" ஏகாதிபத்திய சுரண்டலுக்கு உள்ளாவதுடன் சக்கியர்களின் பிற்போக்குத் தலைமையானது இந்திய உபகண்டத்தினை மூன்றாவதுஉலகப் போரில் தாரைவார்க்கும் உள்ளூடனையும் கொண்டுள்ளது.

எனவே, இந்திய தேசிய முதலாளித்துவத்திற்கெதிரான போராட்டத்திலே சீக்கியர்கள் புதியதொரு புரட்சிகர தலைமையை கட்டியெழுப்ப வேண்டும். இத்தலைமையானது இந்திய தேசிய முதலாளித்துவத்தையும் ஏகாதிபத்தியத்தையும் தோற்கடிக்கும் முன்னோக்கு கொண்டதாகவும் இந்திய உபகண்டத்தில் சோசலிச புரட்சியைக் கொண்டுவரும் திசையில் வளைந்து கொடுக்கத்தக்கதாகவும் இருத்தல் அவசியமாகும். இப்பேர்ப்பட்ட புரட்சிக் கட்சியொன்று உருவாகாதவரையிலேயே சக்கிய மக்களின் போராட்டங்கள்



அவர்களது வாழ்க்கைத்தர மேம்பாட்டிற்கான உருப்படியான போராட்டங்களாக அமையத்தவறுமென்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும். இவ்வாறான புரட்சிக் கட்சியொன்றை படைக்க எடுக்கின்ற இடைமருவுக் காலத்தில் இந்திய தேசிய முதலாளித்துவத்தை ஏகாதிபத்திய சதிகளினின்று நிபந்தனையில்லாது பாதுகாக்க வேண்டும்.

அங்கோலா புரட்சியின் போதும் அதைத் தொடர்ந்து இன்றுவரையும் போரிடும் UNITA படைகளும் அதன் தலைவர் சாவிம்பியும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தினால் விலைக்கு வாங்கப்பட்டு இன்று அங்கோலாவில் மட்டுமல்லாது அதைச் சூழவுள்ள நாடுகளிலும் எதிர்ப்புரட்சி மேலோங்க வழிவகுத்தது போல இந்தி உபகண்டத்திலும் எதிர்புரட்சி மேலோங்க வழிவகுக்கும் தலைமையொன்று உருவாகக்கூடாது என்பதில் நாம் அதிகவனமான இருக்கவேண்டும்.

தமிழீழ போராட்டத்திலும்கூட இன்று பிரிவுபட்டு நிற்கும் இயக்கங்களில் ஏதாவது தனியான ஓர் இயக்கமோ அல்லது இரண்டு மூன்று இயக்கங்கள் கூட்டான பொது அமைப்பொன்றோ ஆட்சியைக் கைப்பற்றினால் தோல்வியடையும் இயக்கம் அல்லது இயக்கங்கள் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் சதிக்கு பலியாகக்கூடிய சாத்தியக்கூறுகள் ( அங்கோலாவில் MPLA ஆட்சியைக் கவிழ்க்க UNITA ஏகாதிபத்தியத்திற்கு துணைபோனதுபோல ) தென்படுமென்பதில் நமது மக்கள் விழிப்புணர்வுடன் இருக்கவேண்டும். இதுவே இன்றைய சீக்கிய மக்களின் சுயநிர்ணய உரிமைப் போரிலும் அங்கோலா புரட்சியிலும் நாம் கற்றுக்கொள்ள வேண்டிய விடயமாகும்.

- OPERATION BLUESTAR என சங்கேத வார்த்தையில் அழைக்கப்பபட்ட இந்திய இராணுவத்தின் தாக்குதல் யூன் 5ம் 6ம் திகதிகளில் நடாத்தப்பட்டது.

- இத்தாக்குதலில் சீக்கிய தீவிரவாதத் தலைவர் பிந்திரன்வாலேயினதும், அனைத்திந்திய சீக்கிய மாணவர் ஒன்றியத்தின் தலைவரினதும், இந்திய இராணுவத்தின் முன்னாள் மேயர் ஜெனரலாக இருந்து ஊழல் குற்றச்சாட்டில் வெளியேற்றப்பட்ட சுபேசிங்கினதும் உடல்கள் கண்டெடுக்கப்பட்டன. சுபேசிங் என்பவரே சீக்கியத் தீவிரவாதிகளுக்கான ஆயுத வகுப்புகளை நடாத்தி வந்தவராவார்.

- இத்தாக்குதலில் குறைந்தபட்சம் 1000 சீக்கியர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். அவசரகாலநிலை பிரகடனப்படுத்தப்பட்ட பஞ்சாப் மாநிலமானது வெளிநாட்டு உள்நாட்டுச் செய்தியாளர்களின் செயற்பாட்டை தடைசெய்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

- பஞ்சாபில் காலாகாலமாக வேரூன்றிய அகாலிதல் கட்சியை தோற்கடிக்கும் நோக்கத்துடன் இந்திராகாந்தியின் தூண்டுதலிலே சீக்கியர்களுக்கான புதிய கட்சியை படைத்தவரே பிந்திரன்வாலே ஆவார். இந்திராகாந்திக்கு பின்னர் இதுவே பெரும் தலைவலியானது.

- சீக்கியர்களின் புனித வழிபாட்டுத்தலமான பொற்கோவிலிலே இந்திய இராணுவம் தாக்குதலைத் தொடுத்ததைத் தொடர்ந்து இந்திய இராணுவத்திலிருந்து ஏறத்தாழ 5000 சீக்கிய இராணுவத்தினர் வேலையைவிட்டு ஓடினர். இது இந்திராகாந்தி அரசாங்கத்திற்கு பெரும் நெருக்குவாரத்தை ஏற்படுத்தியது. இந்திய இராணுவத்தின் உளவியல் இதனால் கடுமையாக பாதிப்புக்குள்ளானது.

- கிழமைக்கணக்கிலே தொடருகின்ற இந்தப் பஞ்சாப் நெருக்கடியிலே கடந்த 29.06.1984 அன்று பஞ்சாபின் கவர்னரான பி.டி. பாண்டே இராஜினாமா செய்துள்ளார்.

- இதைத் தொடர்ந்து பஞ்சாப்பின் ஐ.ஜி.பி (பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல்) பி.எஸ். பிந்தர் இராஜினாமா செய்துள்ளார்.

- காஷ்மீரின் தலைநகரான சிறீநகரில் இருந்து இந்தியன் எயர்லையின்ஸ் விமானமொன்று சீக்கிய தீவிரவாதிகளால் கடத்தப்பட்டது. பாகிஸ்தானில் லாகூர் விமான நிலையத்திற்கு வந்துசேர்ந்த இந்த விமானத்தின் கடத்தல் காரர்களான 8 சீக்கியர்களும் பாகிஸ்தான் அதிகாரிகளிடம் சரணடைந்துள்ளதுடன் பணயக்கைதிகளான 264 பேரையும் விடுதலை செய்தனர். இதற்கு முன்னர் தமது கோரிக்கைகளை ஏற்காவிடில் விமானத்தை வெடிகுண்டு வைத்து தகர்க்கப்போவதாக கடத்தல்காரர்கள் இந்திய அரசை எச்சரித்திருந்தனர்.

- இங்கிலாந்து, அமெரிக்கா, ஜேர்மனி, உட்பட உலகின் பல்வேறு பகுதிகளில் வாழும் சீக்கியர்கள் இந்திராகாந்திக்கெதிரான ஆர்ப்பாட்ட ஊர்வலங்களில் கலந்துகொண்டனர். பஞ்சாப்பிலும் வெளியேயும் காலிஸ்தான் போராட்டம் வலுப்பெற்றுச் செல்கிறது.



# இஸ்லாமிய புரட்சி

கடந்த தசாப்தங்களில் வியட்னாமிய புரட்சிக்குப் பின்னர் அமுக்கிக் கொண்டு போகின்ற இந்த முதலாளித்துவ உற்பத்தி முறையையும் புரட்சியாளர்களுக்கு முன்னால் கையாலாகாத்தனமாகப் போகின்ற ஏகாதிபத்திய எதிர்ப்புரட்சியையும் ஈரானிய புரட்சியானது திரும்பவும் அறுதியிட்டுச் சென்றுள்ளது. ஈரானிய புரட்சியானது எதோ இரண்டொரு ஆண்டுகளில் ஈரான் "ஷா" விற்கும், மக்களுக்குமிடையே ஏற்பட்ட முரண்பாட்டால் வெடித்ததொன்றல்ல. இது முதலாளித்துவ உள்முரண்பாட்டால், உற்பத்தி முறைக்கும் விநியோக முறைக்கும் இடையே ஏற்பட்ட தவிர்க்க முடியாத நெருக்கடியால், தொடர்ச்சியான அதீத சுரண்டலினால், எல்லாவற்றிற்கும் மேலாய் வளர்ந்து வருகின்ற அதி நவீன தொழில் நுட்ப உற்பத்தி முறைக்கு ஏற்றவாறு சமூக உறவை மாற்ற விரும்பாமல் வரலாற்றுச் சக்கரத்தை பின்னோக்கி உருளச்செய்ய எத்தனிக்கின்ற பழமை வாதிகளுக்கு எதிராக ஏற்பட்ட காலாகாலமான வெறுப்பின் தொகுப்பே.

ஈரான், ரஷ்யாவை வட எல்லையாகவும், துருக்கி ஈராக்கை மேற்கெல்லையாகவும், அப்கானிஸ்தான் பாகிஸ்தானை கிழக்கெல்லையாகவும் பாரசீக வளைகுடா, ஓமான் குடாவை தென் எல்லையாகவும் கொண்டு மேற்காசியாவில் அமைந்த ஓர் தேசமாகும். இது 1.6 மில்லியன் சதுர கிலோ மீட்டர் பரப்பளவுடையதும் 30.9 மில்லியன் சனத்தொகையைக் கொண்டதும் 1979ல் வரலாற்றுப் புத்தகத்தில் ஒரு புதிய அத்தியாயத்தை பொறித்து இன்றுவரை ஏகாதிபத்தியத்திற்கு முகம் கொடுக்கும் இன்னோரன்ன விடுதலை இயக்கங்களுக்கு உந்து சக்தியைக் கொடுத்துக்கொண்டிருக்கும் நாடாகும்.

18ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நிலப் பிரபுத்துவத்தினால் நலிந்துபோன ஈரானின் மேல் ஐரோப்பிய முதலாளித்துவத்தின் குறி ஆதிக்கம் செலுத்தத் தொடங்கியது. பிரஞ்சு, பிரிட்டன் ஆகியவற்றின் அதீத பிரயத்தனத்தினோடே பிரபுத்துவத்தினால் நலிந்துபோன ஈரானை நெருக்கிப் பிடித்து ரஷ்யா, அமெரிக்கா, மற்றும் ஐரோப்பியநாடுகளுடன் எழுதப்பட்ட ஒரு பக்க உடன்படிக்கையால் பணிய வைத்தனர். 19ம் நூற்றாண்டில் ஈரானிய – ரஷ்ய போரானது ஈரானினால் ஏற்கனவே வெற்றிகொள்ளப்பட்ட TRANCAUCASIA பகுதியை மீண்டும் ரஷ்ய பேரரசிடம் இழக்கவேண்டி ஏற்பட்டது.

தொடர்ந்து மெல்ல மெல்லமாக உள்ளே செலுத்தப்பட்ட அந்நிய மூலதனமும், ஐரோப்பிய உற்பத்திப் பொருட்களை விற்பதற்கான ஒரு சந்தையாக ஈரானை வைத்திருந்தமையும், ஈரானிய நிலப்பிரபுத்துவ அமைப்பு முறைக்கு பாரிய நெருக்கடியையும் சமூக முரண்பாட்டையும் கொண்டு வந்தது. இதனால் வளர்ந்துவந்த வெகுஜன நம்பிக்கையின்மையானநிலப்பிரபுத்துவ அமைப்பு முறைக்கெதிரான போராட்டமாக விவ-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சாயிகள், சிறு கைவினைஞர்கள், நகரவறிஞர்கள் மற்றும் சிறு வர்த்தகர்கள் தலைமையில் வெடித்தது. பாபி எழுச்சி (Babi uprising) எனப்படும் இவ்வெழுச்சியானது 1849, 1850 களில் மூன்றுமுறை தோல்வியுற்று இறுதிமுறையாக பயங்கரவாத முறையில் இயங்கத் தலைப்பட்டு அப்போதைய உஷாவான NASR AL-DIN ஐ ஆகஸ்ட் 1852ல் கொல்லமுயன்று தோல்வியுறவே பாபி எழுச்சியாளர்கள் பூண்டோடு அழிக்கப்பட்டார்கள். இதையடுத்து சந்தைப்படுத்துவதில் சம்பந்தமுடைய நிலவுடமையாளனைக் கொண்ட ஆளும் வர்க்கத்தை ஒரு பகுதியினர் இந்த நெருக்கடியை தவிர்ப்பதற்கு அந்நிய ஆதிக்கத்தை கட்டுப்படுத்துவதன்மூலம் மைய சக்தியை வலுப்படுத்தி சுதந்திரமாக இயங்கலாமென ஒரு புதிய வழியைக் கண்டுபிடித்தனர்.

இவர்களுக்கு தலைமைகொடுத்த EMIR NEZAM இவ்விலக்கை அடைய முடியாமல், ஈரானின் பிற்போக்கானவர்களின் எதிர்ப்பும், அந்நிய நாட்டு ஆதிக்கமும் (குறிப்பாக பிரிட்டன்), உள்நாட்டு சக்திகளுக்கு சீர்திருத்தத்தில் ஆவல் குன்றியிருந்தமையும் எதிரான முடிவையே கொடுத்தது. இத்தனைக்குள்ளும் குறிப்பிடக்கூடிய பொருளாதார கலாச்சார மேம்பாடுகள் EMIR NEZAM இன் சீர்திருத்தத்தினூடாக 19ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் காணப்பட்டது.

19ம் நூற்றாண்டின் கடைசிப்பகுதியிலும் 20ம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் ஈரான் ஏகாதியத்திய ஆதிக்கத்தின் காலனித்துவ சுரண்டலுக்கு ஆளாகியது. பிரிட்டனும், ரஷ்யப் பேரரசும் சலுகைகளாக புகையிரதப் பாதையும் தந்திச் சேவையும் மற்றும் உதவிகளையும் பெற்றன. பிரிட்டனுடைய உஷாஹன்ஷா வங்கியும் (BRITISH SHAHANSHAH BANK 1889) ரஷ்ய டிஸ்கவுன்-லோன் வங்கியும் (RUSSIAN DISCOUNT-LOAN BANK 1890) திறக்கப்பட்டன. பிரிட்டனுடைய ஆங்கிலோ-பெசியன் எண்ணைக் கம்பனி (Anglo-persian oil company) 1909ல் ஆரம்பிக்கப்பட்டது. இதனால் ஈரானின் எண்ணை வளத்தில் பெரும்பகுதியை தொடர்ச்சியாக சுரண்டிக்கொண்டு வந்தது. பிரிட்டனுடையதும் (1892) ரஷ்யப் பேரரசினதும் (1900திலும் 1902 இலும்) கடன்கள் அதிக வட்டி விகிதத்திற்கு வழங்கப்பட்டன. ஐரோப்பிய இறக்குமதிகள் பல தடவைகள் அதிகரிக்கப்பட்டதோடு வெளிநாட்டு ஆலோசகர்கள் சுங்கப்பகுதிக்கும், நிதிப்பகுதிக்கும் பொறுப்பதிகாரியாக்கப்பட்டார்கள்

ஈரானுக்கு 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ரஷ்ய சாரரசின் அதிகாரத்திற்கு கீழ்ப்படிவான ஆயுதப்படை உருவாக்கப்பட்டு சாரின் பிரதிநிதியால் ஈரானின் வடபகுதி ஆளப்பட்ட அதேநேரத்தில் தென்பகுதி பிரிட்டனின் நலம்பேணும் அதிகாரிகளால் ஆளப்பட்டன. அந்நிய நலம் பேணப்பட்டபடியால் அவர்களின் இறக்குமதிப் பொருட்களும் உள்ளூர் சந்தைக்கு வந்து ஆரம்ப தொழிற்சாலைகளையும், கைத்தொழில் உற்பத்திகளையும் அழித்ததோடு வர்த்தக நிலையங்களையும் திவாலாவாக்கின



அந்நிய சந்தையின் தேவைக்காக விவசாய உற்பத்திப் பொருட்கள் கட்டாயத்தின்பேரில் உற்பத்தியாக்கப்பட்டன. ஆயினும் பலவகைப்பட்ட தொழிற்துறை, புகையிரதப் பாதைகள் மற்றும் தொழிற்சாலைகளால் அப்போதைய அரைக்காலனித்துவ ஈரான், வளர்ந்துவந்த பூர்சுவா வர்க்கத்தை சிக்கலாக்கியது.

தொடர்ச்சியாக கடுமையாக்கப்பட்ட ஏகாதிபத்திய ஒடுக்கு முறையும், சமூக நெருக்கடிகளின் முரண்பாடும், நிலப்பிரபுத்துவத்திற்கும் ஏகாதிபத்தியத்திற்கும் எதிரான பூர்சுவா போராட்டமாக வடிவெடுத்தது. ஒரு பக்கத்தில்; ஆளும் இராஜவம்சத்தினரின் பிற்போக்கு நிலப்பிரபுத்துவ உட்பிரிவும் அதனைத் தாங்கிப்பிடிக்கும் ஏகாதிபத்தியமும் மறுபக்கத்தில்; வளரும் பூர்சுவாக்கள், விவசாயிகள், கைவினைஞர்கள், தொழிலாளர்களுமாக முரண்பட்டு டிசம்பர் 1905ல் நெருக்கடி பாரிய மட்டத்தை அடைந்தது. சந்தைகள், பண்டகசாலைகள், வேலைத்தளங்கள் எல்லாம் மூடப்பட்டன. மன்னரின் கொடுங்கோன்மைக்கு எதிராக Tehran, Shiraz, Meshed போன்ற நகரங்களில் ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் நடந்தன. தெகரானின் அருகில் உள்ள பள்ளிவாசல் மதகுரு தலைமையில் நடந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் மதகுருமார்கள், 5000 இற்கு மேற்பட்ட கைவினைஞர்கள், வர்த்தகர்கள், மதகுருமார்களுக்கான பாடசாலை மாணவர்கள், மற்றும் வெவ்வேறு அணியினரை கைதுசெய்ய எத்தனித்த போது வெகுஜனக் கிளர்ச்சியினால் கிலிகொண்ட மன்னரின் பாதுகாப்புப் படைகள் அதிகாரத்திற்கு அடிபணிய மறுக்கவே மன்னர் ஆகஸ்டு 5, 1906ல் ஒரு புதிய அரசியல் சட்டத்தின் கீழ் ஆட்சிமுறையைக் கொண்டுவர உத்தரவிட்டார். இதன்படி மன்னரின் அதிகார வரம்பெல்லை முதல் பகுதியாகவும், அடிப்படையான சில சட்டதிட்டங்களை உள்ளடக்கிய ஆட்சிமுறையும் டிசெம்பர் 1906ல் ஏற்றுக்கொள்ளப்பட்டது. புரட்சிக்கட்சியின்றி குட்டி பூர்சுவாக்களினால் முனைவுபடுத்தப்பட்ட இந்த வெகுஜன எழுச்சியானது தொட்டறியத்தக்க விளைவுகளை ஏற்படுத்திக்கொடுத்ததன் மூலம் தோற்கடிக்கப்பட்டது.

இரண்டாம் கட்டமான போராட்டம் 1907ல் விவசாயிகள் தொழிலாளிகள், நகரக் குட்டி பூசுவாக்கள் தலைமையில் மிகவும் தீவிரமாக்கப்பட்டது. இந்தப் போராட்டமானது மிகவும் கடுமையாக ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டமாகவும், வெளிநாட்டு உற்பத்திப் பொருட்களை (முக்கியமாக ஐரோப்பிய) பகிஷ்கரிக்கும் போராட்டமாகவும் வளர்ந்து சென்றது. விவசாயிகள் இயக்கமானது, வடபகுதி ஈரானில் இருந்து மத்திய தென்பகுதிகளுக்கு பரவின. கூடவே முதலாவது தொழிலாளர் அணியானது ஆரம்பிக்கப்பட்டது. சமூக, அரசியல் நடவடிக்கையானது ஜனநாயக புரட்சிகர அணிகளையும், தன்னுணர்வுள்ள ஆயுதம் தரித்த தொண்டர் பிரிவுகளையும் வெளிக்கொணர்ந்தது. வெகுஜன எழுச்சிக்கு முகம் கொடுக்க முடியாமல் போகவே சட்டமன்றம் நிலப்பிரபுத்துவத்திற்கு முடிவுகட்டும் சட்டவிதியையும், ஏற்கனவே ஓய்வூதியத்தை பெறும் நிலப்பிரபுகளுக்கு ஓய்வூதியத்தை குறைக்கும் சட்டமூலத்தையும் நடைமுறைப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

படுத்தியதோடு மேலும் சில சட்டங்களை ஏற்கனவே உள்ள அடிப்படை சட்டங்களுடன் தொகுத்து மதச்சார்பான நீதிமன்றங்களுடன் மதச்சார்பற்ற நீதிமன்றத்தையும் கொண்டுவந்தது.

1907ன் ஆரம்பத்தில் தனது ஏகாதிபத்திய நோக்கை பெரிய-பிரித்தானியா மூடிமறைத்து வெகுஜன எழுச்சியாளர்கள் மேல் அனுதாபம் கொண்டதுபோல் நடித்துக்கொண்டது. ஈரானிய வெகுஜன கிளர்ச்சி மேல் பகைமைகொண்டிருந்த சார் அரசானது ( TSAR) 1905-1907 வரையிலான ஜப்பானுடைய போரில் தோற்கடிக்கப்பட்டதால் ஈரானின் பிற்போக்கு அரசிற்கு ஆரம்பத்தில் ஆயுத உதவி வழங்கி தக்க நேரத்தில் தன் சகபாடியை காப்பாற்ற முடியாமல் முடமானது. ஏகாதிபத்திய ஜேர்மனியானது தனது வார்த்தை ஜாலத்தால் பிரிட்டனுக்கும் ரஷ்யப் பேரரசிற்கும் எதிராக பிரசாரம் செய்து தன்னை தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவாளனாகக் காட்டிக்கொண்டது.

மன்னர் முகமட் அலி ( MOHAMMED ALI) தன்னுடைய படையாளரை யூன் 23,1908ல் புரட்சியாளர்களின் மேல் பசியாற விட்டதின் மூலம் புரட்சியை TABRIZ இற்கு நகரப் பண்ணினார்கள். அரசியல் சட்டத்திற்கு ஆதரவான புரட்சியாளர்கள், GILAN, BUSHEHR,BANDAR-ABBAS மற்றும் மாவட்டங்களையும் நகரங்களையும் 1904ன் நடுப்பகுதியில் கைப்பற்றினார்கள். GILAN நகரத்தை கைப்பற்றிய புரட்சியாளர்களை G.K.Ordzhonkidze தலைமையிலான Trancaucasian போல்ஷவிக்கினர் (Bokheviks) 1909 நடுப்பகுதியில் இருந்து 1910ன் இலையுதிர்காலம் வரைபாதுகாத்து வந்தனர். யூலை 1909ல் மன்னர் MOHAMMED ALI,GILAN புரட்சியாளர்களால் தூக்கியெறியப்பட்டதால் அவருடைய மகன் AHMAD-ALI திரும்பவும் அரசியல் சட்டமன்றத்தை கொணர்வதன் மூலம் மன்னரானார்.

தொடர்ச்சியாக நடைபெற்ற எழுச்சிகளுக்குள் 1911ல் யூனில் முன்னாள் மன்னர் MOHAMMED ALI சாரினுடைய (TSAR) அந்தரங்க உதவியாளர்களுடன் ஈரானிற்கு திரும்பவும் வந்து புரட்சியாளர்களை கட்டுப்படுத்த முடியாமல் 1911ன் இறுதியில் ஈரானின் பிற்போக்கான அரசானது ரஷ்ய பேரரசிற்கும், ஏகாதிபத்திய பிரிட்டனுக்கும் தாளம் போட்டதின் மூலம் தற்காலிகமாக புரட்சி, தடுத்துவைக்கப்பட்டது.

முதலாம் உலகப்போரின்போது தனது மில்டரி நடவடிக்கையால் வெளியுலகிற்கு வந்த ஈரானின் வடபகுதியை சார் ஆட்சி கைப்பற்றிய அதே வேளையில் தென்பகுதியை ஏகாதிபத்திய பிரிட்டன் கைப்பற்றிக் கொண்டது. GILAN ல் குடிகொண்டிருந்த ஏகாதிபத்திய எதிர்ப்பானது வாழைப்பழத்தில் ஊசியேற்றப்படுவதுபோல நாலாபக்கமும் மெல்ல



மெல்ல தன் புரட்சியுணர்வை மற்றப்பக்கத்தில் செய்துகொண்டிருந்தது. இவ் ஏகாதிபத்திய எதிர்ப்பு அலைவரிசையானது சார் ஆட்சி தோற்கடிக்கப்பட்டு மாபெரும் ஒக்ரோபர் புரட்சி (1917) நடைபெற்ற பின்னர் மேலும் ஆத்மபலம்பெற்று வளர்த்தொடங்கியது.

ஈரானுடன் சாராட்சி ஏற்படுத்திக்கொண்ட மனிதாபிமானமற்ற உடன்படிக்கைகள், ஒப்பந்தங்கள் ஒட்டுமொத்தமாக குழந்தை சோவியத் ஒன்றியமானது நீக்கி, ரஷ்யப் படைகளையும், ஈரானையும் விட்டு விலகிக்கொண்டபின் புரட்சியாளர்களுக்கும், சோவியத் ஒன்றியத்திற்கும் இடையேயிருந்த உறவு மேலும் இறுகி பலம்பெற்றது. தேசிய விடுதலை இயக்கங்களை நசுக்குவதற்காகவும், குழந்தை சோவியத்தின்மேல் ஆக்கிரமிப்பு செய்யவும் பிரித்தானிய ஏகாதிபத்தியமானது 1918ல் முழு ஈரானையும் கைப்பற்றி 1919ல் மேலும் இறுக்கிப் பிடித்து சுரண்டுவதற்கு துணைசெய்யும் ஒப்பந்தங்களைச் செய்துகொண்டது. அத்துடன் பிரிட்டனின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்பட்ட ஈரானிய VOSUGH AL- DA ULEH அரசாங்கமானது தனது கொள்கையில் ஒன்றாக புதிய சோவியத் ஒன்றியத்துடன் பகைமையான நடவடிக்கையை செய்துகொண்டு வந்ததுடன் 1918 நவம்பர் 3ல் தெகரானில், சோவியத் தூதுக்குழு ஒன்றின் மேல் திடீர்த் தாக்குதல் நடாத்துவதற்கு உறுதுணையாக இருந்ததும், சோவியத் தூதுவர் I.O.KOLOMITSEV ஆகஸ்ட் 1919ல் கொலைசெய்யவும் பக்கபலமாய் இருந்தது.

லெனினிய (LENINIST) சம்பிரதாயமான அண்டை நாடுகளுடன் நட்பும், தோழமையும், கீழைத்தேச மக்களுடன் சோவியத் ஒன்றியத்தின் உறவும் வலுக்கவே பிரித்தானிய ஏகாதிபத்தியம் ஈரானை முற்றாக கட்டிப்போட முடியாமல் ஏகாதிபத்திய எதிர்ப்பானது ஈரானிலும் அண்டை நாடுகளிலும் வலுப்பெற்றது.

முன்னாள் ரஷ்ய பேரரசினால் உருவாக்கிவைத்த ஈரானிய படையானது, REZA KAHN என்பவரின் தலைமையில் ஒரு மில்டரி சதியை பெப்ரவரி 21,1921ல் நடாத்தி முடித்து SAYYID ZIA - AL- DIN இன் தலைமையில் ஒரு அரசாங்கத்தை உருவாக்கியது. இதில் REZA KAHN யுத்த மந்திரியாக இருந்தார். யுத்த மந்திரியாக இருந்துகொண்டு பல்வேறு நிலப்பிரபுக்களை ஒன்றுகூட்டி ஓர் மையப்படுத்தப்பட்ட அதிகாரத்துவத்தை கட்டிவளர்த்தார். 1925 ஒக்ரோபர் 31ல் ஐந்தாவது சட்ட மன்றம் QAJAR இராஜவம்சத்தினர் தூக்கியெறியப்பட்டதை அறிவித்ததோடு 1925 டிசம்பர் 12ல், RESA KAHN, REZA SHAH PAHLAWI என்ற பெயரில் ஈரானின் மன்னராகின்றாரெனவும் அறிவித்தது. சட்டங்களும், சில சமூக சலுகைகளும் வளர்ந்துவரும் பூர்சுவா வெளிப்பாடுகளாக வந்தன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1923 - 1933ற்கும் இடையான உலகப் பொருளாதார நெருக்கடியானது ஈரானில் பாரிய பொருளாதார நெருக்கடியை பாச்சியது.

குறிப்பாக விவசாயத்தில் பயிரிடப்பட்ட பரப்பளவு குறுகியமையும், நிலவுடமையாளர்களின் பின் வாங்கலும் மறைமுக வரி அதிகரிப்பும், வேலையில்லா திண்டாட்டத்தை அதிகரித்தது. இந்த நிலைமைகளானது தொழிலாளர்கள், விவசாயிகள் சோதனைகளையும் துன்பங்களையும் வளர்த்ததோடு ஆங்கிலேய-ஈரானிய எண்ணைக் கொம்பனியில் வேலை நிறுத்தப்போராட்டத்தை கொணர்ந்தது. இந்த வேலை நிறுத்தமானது மேலும் நெருக்கடியைக் கொடுக்கவே அரசபடைகளால் வேலை நிறுத்தம் நசுக்கப்பட்டது. 27ல் சோவியத்-ஈரானிய உடன்படிக்கையானது இரண்டு நாடுகளுக்குமிடையேயுள்ள இறைமையை உறுதிப்படுத்தியபோதும், பொருளாதார நெருக்கடியின் பின்னால் ஏகாதிபத்தியத்தின் சதியானது 1930க்குப் பின்னர் ஈரானை சோவியத்துடனான உடன்படிக்கையில் இருந்து விலகிச்செல்லச் செய்தது. பாசிச ஜேர்மனியானது சோவியத் யூனியனுக்கெதிரான யுத்தத்திற்காக பிற்போக்கு ஈரானை மேலும் ஊக்குவித்து வந்தது. கிட்லரின் ஏஜென்டுகள் சோவியத் யூனியனை விரட்டவே ஆகஸ்ட் 1941ல் சோவியத் யூனியன் தனது படைகளை ஈரானின் எல்லைப்பகுதிகளுக்கு 1927ன் சோவியத் - ஈரான் உடன்படிக்கைக்கமைய தற்காலிகமாக நகர்த்தியது. பிரித்தானிய துருப்புக்களும் ஈரானுக்கு வந்தடைந்த அதே நேரத்தில் 1941 செப்டம்பர் 16ல் மன்னர் REZA SHAH அதிகாரத்தைக் கைவிட்டு 1942 ஜனவரி 29ல் REZA SHAH வின் மகனான MOHAMMED REZA-PAHLAVI மன்னரானார். அமெரிக்க மில்டரி படையும் 1942ன் பிற்பகுதியில் ஈரானுக்கு வந்தது.

1942 ஜனவரி 29ல் சோவியத் யூனியனும், பெரிய பிரித்தானியாவும், ஈரானும் ஓர் கூட்டு உடன்படிக்கை செய்தன. இது இரண்டு நாடுகளையும் தொலைத்தொடர்பு சாதனங்களையும், போக்குவரத்துச் சாதனங்களையும் பயன்படுத்துவதற்கு வழிவகுத்தது. 1943 செப்டம்பர் 9ல் ஈரான் ஜேர்மனுக்கெதிரான போர்ப்பிரகடனம் செய்தபோதும் அது போர் நடவடிக்கையில் இறங்கவில்லை. 1943 டிசம்பர் 1ல் தெகரானில் சோவியத் யூனியன், அமெரிக்க , பிரிட்டன் தலைவர்கள் ஈரான் தலைவர்களுடன் நடாத்திய பேச்சுவார்த்தையில் ஈரானுக்குத் தேவையான பொருளாதார உதவிகளை வழங்குவதென்றும் ஈரானின் இறைமை, தனித்துவம் போன்றவற்றை பாதுகாப்பதென்றும் முடிவாகியது. சோவியத் யூனியன், ஈரானின் போர் விளைவுகளின் கொடுமைகளை தணித்ததோடு தொழில் நுட்பரீதியான உதவிகளையும் செய்தது.

அமெரிக்க ஏகாதிபத்தியமானது இரண்டாம் உலகப் போரினால் ஏற்பட்ட நெருக்கடியைப் பாவித்து ஈரானில் தன்னை மேலும் ஸ்திரப்படுத்திக்கொள்ள முயன்றுகொண்டிருந்தது. அத்துடன் அமெரிக்க ஏகாதிபத்தியமானது ஈரானியப்படைகளுக்கும் ஆலோசகர்களை வழங்கியும்,



A.C. MILLSPAUGH தலைமையிலான நிதிக்குழு ஒன்றையும் 1943ல் ஈரானுக்கு அனுப்பியது. 1945, 46ல் ஈரானில் ஜனநாயக அணியின் வளர்ச்சிக்கும், ஏகாதிபத்திய எதிர்ப்புரட்சியாளர்களுக்கும் தோல்வி கண்ட பாசிச ஜேர்மனியும், ஜப்பானும் ஊக்கமளித்தன. 1946ல் வந்த QAVAM AL- SALTANCH அரசானது அமெரிக்க, பிரிட்டன் உதவிகளில் தங்கிநிற்கவேண்டி ஏற்பட்டதால் அரும்பிவந்த முற்போக்கு புரட்சிகளை நசுக்கியது. 1941ல் ஆரம்பித்த TEDEH PARTY (மக்கள் கட்சி) தொடர்ச்சியான நசுக்கலினால் அரசரைக் கொலைசெய்ய எடுத்த முயற்சி அம்பலமாகவே TEDEH PARTY தடைசெய்யப்பட்டதுடன் முற்போக்குப் பத்திரிகைகள் வெளியிடுவது தடைசெய்யப்பட்டு, ஆர்ப்பாட்டம் செய்த வெகுஜனங்களும் கைதுசெய்யப்பட்டனர். வளர்ந்துவந்த ஆங்கிலோ-ஈரானிய எண்ணைக் கொம்பனி எதிர்ப்பியக்கமானது 1950 - 1951ல் மேலும் பலம்பெற்றதுடன் பாரிய மட்டத்தில் ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் நடாத்தியதோடு 1933ம் ஆண்டின் உடன்படிக்கையை நீக்கவேண்டுமெனவும், எண்ணைக் கொம்பனிகளை தேசியமயமாக்க வேண்டுமெனவும் ஏகாதிபத்தியங்களுக்குக் கொடுத்த சலுகைகளையும், பத்திரிகைத் தடையையும் நீக்கவேண்டுமென்றும், ஜனநாயகத்திற்கு போராட அனுமதிக்க வேண்டுமெனவும் கோரிக்கை விட்டன. 1949ல் M.MOSSADEGH தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட தேசிய முன்னணியானது எண்ணைக் கொம்பனிகளை தேசியமயமாக்கலில் வெகுஜனங்களோடு முன்னணி வகித்தது. 1951 மார்ச் 11ல் சட்டமன்றம் எண்ணைக்கொம்பனிகளை தேசியமயமாக்கும் சட்டம் அமுலாக்கப்பட்டதோடு 1951 எப்பிரல் 29ல் MOSSADEGH தலைமையில் ஓர் அரசாங்கத்தைக் கொண்டுவந்தது.

அமெரிக்க ஏகாதிபத்தியமானது ஆரம்பத்தில் பிரிட்டனுடைய கட்டுப்பாட்டின் கீழிருந்த எண்ணைக் கொம்பனிகளை தன்வசமாக்க, தேசிய மயமாக்கும் இயக்கத்திற்கு ஆதரவு செய்தபோதிலும் வளர்ந்துவந்த ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கமானது அமெரிக்க ஏகாதிபத்தியம் எண்ணைக் கொம்பனிகளை கைப்பற்றத் தடையாய் இருந்தபடியால் மீண்டும் பிரிட்டனுடன் சேர்ந்து தேசியமயமாக்கலை எதிர்த்துக்கொண்டது. இருந்தபோதிலும் MOSSADEGH தலைமையிலான அரசாங்கம் அமெரிக்க, பிரிட்டன் கோரிக்கையை செவிசாய்க்கவில்லை. 1957 ஒக்ரோபரில் எண்ணைக் கிணறுகளிலும், சுத்திகரிப்பு ஆலைகளிலும் வேலைசெய்த பிரித்தானியர்கள் வெளியேற்றப்பட்டார்கள். ஏகாதிபத்திய சதியாலோசகர்கள் 1952 யூலையில் MOSSADEGH அரசைக் கவிழ்க்க முயற்சித்து தோல்வியுற்றபின் 1952 ஒக்ரோபர் 22ல் பிரித்தானியாவிற்கும், ஈரானுக்குமுள்ள நட்புறவு முறிந்து ஈரானிலுள்ள பிரித்தானியாவின் பிரதிநிதிகள் எல்லோரும் வெளியேற்றப்பட்டார்கள்.

தேசிய பூசுவாக்களின் நலனைப் பிரதிநிதித்துவப்படுத்தும் MOSSADEGH அரசானது 1953 ஆகஸ்ட் 19ல் மில்டரி சதிசெய்து கவிழ்க்கப்பட்டது. ஜெனரல் ZAHED பிரதமரானார். மீண்டும் பிரித்-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தானிய ஏகாதிபத்தியத்துடன் உறவு வைக்கப்பட்டு 1954ல்சர்வதேசியஎண்ணெய் நிறுவனத்துடன் (International oil Consortium) எழுதப்பட்ட உடன்படிக்கை திரும்பவும் ஈரானை சுரண்ட அனுமதித்தது. பிரச்சனைக்குரிய " பாக்டாட் உடன்படிக்கை " (BAGHDAD PACT) யில் ஈரானும் 1955ல் ஒப்பந்தம் செய்துகொண்டபின் வெளிநாட்டுக் கொம்பனிகள் சுரண்டும் ஒப்பந்தங்கள் செய்யவேண்டியநிலை ஏற்பட்டது. ஜேர்மன் சமஷ்டிக்குடியரசின் மூலதனமானது மெல்ல மெல்ல உட்செலுத்தப்பட்டு தற்காலிக "குளுக்கோஸ்" கொடுக்கப்பட்டது. பெருவாரியான அமெரிக்க, மற்றும் ஐரோப்பிய ஆலோசகர்கள் படைப்பிரிவிற்கும், நிதிப் பிரிவிற்கும் 1958ல் புகுந்தார்கள். 1961ல் மட்டும் மொத்தம் 700 மில்லியன் டொலரை கடனாகக்கொடுத்து சுரண்டப்பட்டது. கடன் என்ற குளுக்கோஸ் " செலோயின் " குழாயினால் கொடுக்கப்பட்டு " இரத்தம் " என்கின்ற எண்ணெய், பம்பினால் வெளியேற்றப்பட்டுக்கொண்டிருந்தது. தொடர்ச்சியான, அதிகப்படியான "இரத்த" இழப்பினால் வாழ்க்கைத்தரமானது 1936யும் பார்க்க 1600 வீதத்தால் ஆகாயத்தை தொட்டது.

புரட்சியாளர்களின் தொடர்ச்சியான தாக்குதலுக்கு முகங்கொடுக்கமுடியாமல் ஈரானியப் பிற்போக்கரசானது அரசியல், சமூக, பொருளாதார சலுகைகள் சிலவற்றை கொடுக்கவேண்டியநிலைமை ஏற்பட்டது. அத்துடன் விவசாய உற்பத்திகள் உள்நாட்டுத் தேவையை பூர்த்தி செய்யாமல் போகவே இறக்குமதி செய்ய வேண்டிய அவசியமுமேற்பட்டது. விவசாயி நெருக்கடியானது நிலப்பிரபுக்களுக்கு மரண அடி கொடுக்கவே, ஈரானிய விவசாயத்தில் போதிய அளவுக்கு முதலாளித்துவம் வளரவிடப்பட்டது. விவசாயத்திலும், தொழிற்துறையிலும் மாறி மாறி ஏற்பட்ட குறிப்பிடக் கூடிய வளர்ச்சியானது கல்வி, சுகாதாரம்போன்றவற்றிலும் குறிப்பிடக் கூடிய அளவு வளர்ச்சியைத் தந்தது. தொடர்ச்சியான பலத்த போராட்டத்தின் பின்னர் 1963 இல் பெண்களுக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டது.

அமெரிக்க, ஐரோப்பிய முதலாளித்துவத்தின் ஒரேபக்க பிடியில் இருந்து ஈரானானது, மெல்ல மெல்ல 1960ம் ஆண்டின் பின்னர் விலகிச் சென்று கொண்டிருந்தது. மறுபக்கத்தில் சோவியத் யூனியனுடன் உள்ள உறவும் வலுத்துச் சென்று கொண்டிருந்தது. இருந்த போதும் ஈரானுடன் அமெரிக்க ஏகாதிபத்தியம் 1959 இல் எழுதிக் கொண்ட உடன்படிக்கையானது ஈரானுடன் சோவியத் யூனியனுக்கிடையான உறவை வலுப்படுத்த முடியாமல் தடையாயிற்று.

1968ம் ஆண்டின் புள்ளி விபரப்படி, ஈரானில் பிறப்புவிகிதம் 3.89 ஆகவும், இறப்புவிகிதம் 0.61 ஆகவும் உள்ளது. ஆனால் ஒவ்வொரு ஆயிரம் குழந்தைகளில் 56 குழந்தைகள் இறந்து விடும் அளவிற்கு மருத்துவ வசதிகள் மிகவும் குறைவு. ஈரானிய மக்கள் ஒடுக்குமுறைக்கும், சுரண்-



டலுக்கும் எதிராக போராடும் அதே நேரத்தில் தொற்று வியாதிகளுக்கும் எதிராக போராட வேண்டிய இக்கட்டான நிலையை எய்தினார்கள் முக்கியமாக மலேரியா நோய் பெரும்பான்மையான இறப்புக்கு காரணமாயிற்று.

ஈரானானது 1972ம் ஆண்டில் 181,000 பேரைக்கொண்ட முப்படையினரையும், அமெரிக்க, பிரிட்டன் தவிர்ந்த 40,000 பேரைக்கொண்ட வெளிநாட்டுப் படையினரையும் அணிவகுத்து எதிர்ப்புரட்சிக்குத் தயாராகி இருந்தது. இவர்களெல்லோரும் பிரதம சேனாதிபதியும், மன்னருமாகிய "ஷா" வின் கீழ் இயங்குவர். 150,000 பேரைக்கொண்ட ஈரானிய காலாட்படையானது ஆறு பிரிவைக் கொண்டது. இப்பிரிவில் 3பிரிவுகள் ஆயுதம் தரிக்காதவையும், 3பிரிவுகள் ஆயுதம் தரித்த படைப்பிரிவையும், 5 வெவ்வேறு பிரிகேடியர் பிரிவைக்கொண்ட பட்டாளங்களையும், பிரங்கி படைப்பிரிவையும் கொண்டது. இது தவிர ஆகாயப்படை 211 போர் விமானங்களையும் ஹெலிகொப்டர்களையும், அமெரிக்க F-4, F5 போர் விமானங்களையும் உள்ளடக்கியது. 9000 பேரைக்கொண்ட கடற்படையானது கப்பல்களைத் தாக்கி அழிக்கும் விசேட தொழில் நுட்பத்தைக் கொண்ட நாசகாரியையும், நீர் மூழ்கிக்கப்பல்களையும் கொண்டது.

அடுத்தடுத்த எழுச்சியும், ஒடுக்கலும் கொடுத்த படிப்பினையானது ஈரானிய வெகுஜனங்களை அணிவகுக்கும் பக்கம் திருப்பியது. ஷாவின் தொடர்ச்சியான ஒடுக்கலானது அணிவகுத்தலை மிகவும் சுலபமாக்கியது. ஷாவை இரண்டு முறை கொலை செய்ய எத்தனித்தும், பயங்கரவாத முறையில் தோற்கடிக்க முயன்றும்; காலங்காலமாக அணிவகுத்ததும் எதிர் புரட்சிக்கென்றே தயாரித்த படைகளை தோற்கடிக்கமுடியாது மட்டுமல்ல இதனால் வெகுஜனங்களை அணிவகுக்கமுடியாது என்பதை கண்டு கொண்ட புரட்சியாளர்கள் வெகுஜனங்களை மொத்தமாக அணிவகுப்பதில் இறங்கினார்கள். அதோடு மட்டுமல்ல 1906ல் இருந்து 1911 வரை நடந்த புரட்சியானது முதலாவது மன்னரின் (Reza Shah)சர்வாதிகாரத்தையும், 1950ன் தேசியமயமாக்கும் போராட்டமானது இரண்டாவது சர்வாதிகார ஆட்சியையும் பிரதி விளைவாக பெற்ற ஈரானிய மக்கள் பக்குவமாக அணிவகுக்கப்பட்ட ஓர் புரட்சிக்கட்சியின்றி செய்யும் புரட்சியானது எதிர்புரட்சிக்கே வழிவகுக்கும் என்பதை அனுபவவாயிலாக கண்டுகொண்டார்கள்.

ஈரானில் சுதந்திரமாக இயங்குவதற்கு கம்யூனிஸ்ட்கட்சி மற்றும் வெகுஜன எழுச்சிக்கு ஆதரவான கட்சிகள் தடைசெய்யப்பட்டமையும், எந்த விதத்திலும் அரசுக்கு குந்தகம் செய்யமாட்டாத சமூகதொழிலாளர்கட்சி (Social Workers Party)யை மட்டும் இயங்க அனுமதிக்கப்பட்டு அங்கே தொழிலாளர்வர்க்க கட்சி இயங்கமுடியாத சர்வாதிகார ஒடுக்குமுறைத் தாண்டவமானது தொடுக்கப்பட்டு, தேசிய விடுதலைப் புரட்சியாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வெடித்தது. வரலாற்றின் சில காலகட்டங்களில் தேசியவிடுதலைப் போராட்டமானது சோசலிச போராட்டத்திலும் மிக முக்கியமானதும் அவசியமானதும் கூட. அதற்கு முக்கிய காரணம் சோஷலிசப் புரட்சி செய்வதற்குச் சிறிதளவாவது ஜனநாயகம் தேவை ஈரானின் சர்வாதிகார ஆட்சியில் வைத்து சோஷலிச புரட்சி செய்வது என்பதொன்று சாத்தியமல்ல. இந்த காலகட்டத்தில் ஈரானின் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு சோஷலிச நாடுகளான ரஷ்யாவும், சீனாவும் "இது சோஷலிச புரட்சியல்ல" என்று காரணம் கண்டுபிடித்து ஆதரவளிக்காமல் ஷாவை மகிழ்வித்தன.

இத்தனைக்குள் ஈரானின் தேசிய இரகசிய பொலிசானது (SAVAK) தான் நினைத்தமாதிரி புரட்சியாளர்களை அங்கச்சித்திரவதை செய்ததன் மூலம் மகிழ்ந்தன. சித்திரவதைசெய்யப்பட்ட புரட்சியாளர்கள் "கவனமாகப் பாதுகாக்கப்பட்ட" சுரங்க இரும்பு அறைகளில் வருடக்கணக்கில் பூட்டிவைக்கப்பட்டனர். இவர்களுக்கான உணவு ஒரு குறுகிய துவாரத்தினூடாக நகர்ந்து கொண்டிருக்கும் "பெல்ட்டில்" (BELT) அனுப்பப்படும். மிக நுண்ணிய கருவியொன்று உட்செல்லும்உணவுகளை கவனமாக பரிசோதித்தே உள்ளனுப்பும். சந்தேகத்திற்கிடமான உணவு உடனடியாக திருப்பியனுப்பிவிடும் அளவிற்கு எதிர்ப்புரட்சி அரக்கனாய் நின்றது.

புரட்சிக்கான அணிவகுப்பு பள்ளி வாசல்களிலும் மற்றும் முடிந்த இடங்களிலெல்லாம் நடந்துகொண்டிருந்தன. 15 வருட காலத்திற்கு முன் ஷாவினால் நாடுகடத்தப்பட்டு பாரிசில் இருந்த மதத்தலைவர் அயுத்தல்லா கொமேனியின் தலைமையின்கீழ் புரட்சியாளர்கள் அணிவகுக்கப்பட்டார்கள். அயுத்தல்லா கொமேனியின் பிரதிநிதியாக தெஹறான் பள்ளிவாசல் பிரதமகுருவும் அணிவகுப்பில் திறமைசாலியான அயுத்தல்லா மொகமட்தல்கானி ஈரானிலிருந்து தெஹறான் உட்பட பல நகரங்களையும் போராட்டத்திற்கு தயாரித்தார். நாளாந்தம் மக்கள் என்ன நடவடிக்கை எடுக்கவேண்டும்? அதன் விளைவுகளை எப்படிச் சந்திக்கவேண்டும்? என்பவற்றை பாரிசிலிருந்த கொமேனியின் குழுவானது ஒலிபதிவுநடாக்களில் பதித்து அனுப்பி ஒரு புரட்சிக்குழு அணிவகுப்புக்கு செய்யும் நாளாந்த பத்திரிகைப் பிரசாரத்திலும் பார்க்க பலமடங்குசக்தி வாய்ந்ததாக செய்துகொண்டிருந்தது. ஐந்திலிருந்து பத்தொன்பது வயதுக்குட்பட்டவர்களில் நாற்பத்தைந்து வீதம் மட்டுமே பாடசாலை செல்பவராகவும், மொத்த சனத்தொகையில் முப்பத்தேழு சதவீதமானோரே எழுத வாசிக்கக் கூடியவராக இருந்தமையால் ஒலிப்பதிவு நடாக்கள்மூலம் செய்த பிரசாரமானது பாரிய சக்தியைக் கொடுத்தது.

வெகுஜன எழுச்சியானது 1978ல் நடுப்பகுதியில் நாள்தோறும் வீதிக்கிறங்கி ஆர்ப்பாட்ட ஊர்வலங்களை நடத்துவதென்பது வழக்கமாகிவிட்டது. மற்றப்பக்கத்தில் கம்பனிகளும் தொழிலகங்களும் மூடப்பட்டன. வேலை நிறுத்தம் நடந்துகொண்டிருக்காத கம்பனிகளே இல்லையெனலாம்.



ஈரானிய எண்ணெய்க் கொம்பனி வேலைநிறுத்தமானது பொருளாதார நெருக்கடியைக்கொடுத்து அரச இயந்திரத்தை அசையவிடாமல் செய்ததுடன் 27 வருட பின்அடைவையும் கொடுத்தது. ஆயுதப்படையினரால் நாள்தோறும் நூற்றுக்கணக்கில் மடிவதென்பது சர்வசாதாரணமாகிவிட்டது. செப்டம்பர் 8ம் திகதி 12நகரங்களில் அவசரகாலச் சட்டம் அமுலாக்கப்பட்டது. தெஹறான் பல்கலைக்கழகத் தலைமையில் நடந்த ஆர்ப்பாட்ட ஊர்வலமானது பாரிய வெற்றியடைந்ததை பொறுக்கமுடியாத அரச படைகள் ஊர்வலத்தில் அரசருக்குமேலுள்ள விசுவாசத்தை காட்டுமுகமாக "மரியாதை வேட்டுக்கள் தீர்த்ததைத் தொடர்ந்து மூன்று மாணவர்கள் உடனடியாக இறந்தனர். பலர் பலத்த காயமுற்றனர். இதனைக்கண்டித்து பிரதமர் ஜபார்சாரிப் இமாமி தலைமையிலான அரசு உடனடியாக இராஜினாமாச் செய்தது. நவம்பர் 6ம் திகதி ஈரான் முழுவதும் அவசரகாலச்சட்டம் பிறப்பிக்கப்பட்டதுடன் மில்ட்டரி அரசு நியமிக்கப்பட்டது. இம் மில்ட்டரி அரசானது வேலைநிறுத்தம் செய்யும் எண்ணெய்த் தொழிலாளர்களுடன் பேச்சுவார்த்தைசெய்து சமரசம் இல்லாமல் போகவே நெருக்கடியானது உச்சக்கட்டத்தை அடைந்தது. யூனியன் தலைவர்களையும் மற்றையோரையும் சிறையிடப்போவதாகவும் தொழிலாளரைச் சுடப்போவதாகவும் மிரட்டி தற்காலிகமாகப் பணியவைத்தது.

மற்றப்பக்கத்தில் எண்ணெய் நெருக்கடியானது ஈரானை 27 வருடம் பின்னடையச் செய்யவே ஷாவைக் காப்பாற்ற வருவோர் ஈரானின் பின்னடைவையும் சேர்த்துக் காப்பாற்றவேண்டுமேயென்று பயத்திலும் புரட்சியாளர்களை இம்முறை தோற்கடிக்க முடியாது என்பதை அறிந்துகொண்டு மிகக்கவனமாக நடந்துகொண்டனர். மேலும் உதவிசெய்வோருக்கெதிராக உலகம் முழுவதிலுமுள்ள அவர்களின் உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களில் ஏற்கனவே தயாரித்து வைக்கப்பட்ட ஈரானிய மாணவர் குழுக்களானது ஆர்ப்பாட்டம் செய்து தடுத்தனர். அமெரிக்க ஏகாதிபத்தியமானது தான் தொடர்ந்து ஷாவோடு நிற்பதாக தூதுவர் WILLIAM SULLIVAN மூலம் உறுதிப்படுத்தியது அதாவது ஷாவுக்கு அனுப்பிய அந்தரங்கச் செய்தியில்;

"Here is a copy of a top secret(For your eyes only)report that I sent to Washinton to say that the shah was irreplaceable and that the US should go the way with him. The trouble with you guys is that you panic easily. Our people report that the opposition meetings are poorly attended and organized haphazardly; and therefore they should be regarded as a nuisance and not a threat."




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

" உஷாவை நிலைபெயர்க்க முடியாதெனவும் அமெரிக்கா எல்லா வழிகளிலும் அவருடனேதான் இயங்கவேண்டுமென்றும் நான் இப்போது வாஷிங்டனுக்கு அனுப்பிய அதி இரகசியத் தபாலின் ( உங்களுடைய கவனத்திற்கு ) ஒன்றை இத்துடன் இணைக்கின்றேன் நீங்கள் இலேசாகக் கிலேசமடைவதுதான் உங்களிலுள்ள பெரிய குறை. எதிரிகளின் கூட்டங்கள் மிகவும் ஒழுங்கீனமான முறையில் நடாத்தப் படுகின்றனவெனவும் மக்கள் குறைவாகவே திரளுகிறார்கள் எனவும் எமது ஆட்கள் தகவல் தருகின்றனர். எனவே அவர்கள்பற்றி பீதியடைவேண்டியதில்லை. கரைச்சல் தருபவர்களென்றே கருதவேண்டும். "

தசாப்தம் தசாப்தமாக சேர்த்துவைக்கப்பட்ட மொத்த வெறுப்பானது (ABADAN) அபடான் என்ற இடத்தில் புரட்சியாளர்களில் ஓர் முக்கிய உறுப்பினர் தியேட்டர் ஒன்றுக்குள் இருப்பதையறிந்து ஈரானிய இரகசியப் பொலிசார் தியேட்டரை மூடிக் கொழுத்தவே 500க்கு மேற்பட்ட வெகுஜனங்களும் எரியூட்டப்பட்டதிலுல் ரேட்டிற்கு வந்தது நிற்கப்போவதில்லையென்று அறிந்த அமெரிக்க ஏகாதிபத்தியம் தனது நாட்டினரை( பெரும் பகுதியினர் படைகளின் தளபதிகளும், ஜெனரல்களும் ) வெளியேறுமாறும் இனிமேல் அவர்களுக்குப் பாதுகாப்புத் தரமுடியாத நிலையாய் இருப்பதையும் அதிகாரபூர்வமாக நவம்பர் 10ல் அறிவித்தது.



www.tamilarangam.net

தொடர்ச்சியான ஆர்ப்பாட்டமும் வேலை நிறுத்தமும் அரச இயந்திரங்களை அசையமுடியாமல் செய்தமையும் மன்னர் ஆட்சியை உலுக்கிக்கொட்டவே ஷா மற்றுமொரு பிற்போக்கு வழியைப் பாவித்தார். இதன்மூலம் எதிர்கட்சி உறுப்பினரில் ஒருவரான ஷாபூர் பக்தியார் . ஓர் அமைச்சை உருவாக்கி மில்ட்டரி அரசைக் கலைத்து இராணுவம் சம்பந்தப்படாத ஓர் அரசை உருவாக்கினார். பக்தியார் அரசானது ஷாவினால் உண்டாக்கப்பட்டாலும் அது மறைத்து அது ஷாவிலும் பார்க்க நல்ல அரசாக தன்னைக்காட்ட நாடகமாடிற்று. புதிய அரசானது தடைசெய்யப்பட்டிருந்த ஊர்வல, ஆர்ப்பாட்ட தடையெல்லாம் நீக்கி ஊர்வலமும், ஆர்ப்பாட்டமும் செய்யச் சிலநாட்கள் விட்டன. ஊர்வலமும் ஆர்ப்பாட்டங்களும் ஈரான் மண்ணில் நிறைய புரட்சியாளர்களை ஆத்திரமூட்டவிட்டு மொத்தமாக வேட்டையாடிற்று. ஒவ்வொரு அரச ஆத்திரமூட்டல்களும் புரட்சியை மேலும் மேலும் முன்னுக்குக் கொண்டுவந்தது. அது அணிவகுப்பையும் சுலபமாக்கிற்று. அமெரிக்க ஏகாதிபத்தியமோ தனது மேச்சல் பறிபோவதையெண்ணி முனகி அடுத்த திட்டத்தை அவசரமாக தீட்டிற்று. அதன்மூலம் ஷாவை ஜனவரி 16ம் திகதி ஈரானைவிட்டு வெளியேறும்படி பணித்து ஈரானைச் சாந்தப்படுத்தலாமென எண்ணிற்று. ஷாவின் வெளியேற்றம் புரட்சியாளருக்கு பலத்த சக்தியைக் கொடுத்தது. பாரிசில் இருந்துகொண்டு கொமேனி புரட்சியாளர்களுக்கு பக்தியார் அரசையும் வெளியேற்றத் தொடர்ந்து போராட உத்தரவிட்டார், ஜனவரி 20ல் கொமேனி பாரிசிலிருந்து ஈரானுக்கு திரும்ப அறிவித்தவுடன் பக்தியார் அரசானது தன்னுடன் பேச்சுவார்த்தைக்கு வரவேண்டுமென்றும், அவருடைய நாடு திரும்பலை பின்போட்டு மக்களைத் தங்களுக்கு தேவையான அரசைத் தேர்ந்தெடுக்க உடன்பட்டால் தன்னுடைய அரசு இராஜினாமா செய்யுமென்றும் அறிவித்தார். அதிலும் முடியாமல் போகவே மாற்று வழியில்லாமல் அரசுடன் பேச்சுவார்த்தைக்கு வராவிட்டாலும் கொமேனி நாடுதிரும்பலாமென உத்தரவிட்டார்.

பெப்பரவரி 01ல் நாடுதிரும்பிய கொமேனி இஸ்லாமிய குடியரசை உருவாக்கப்போவதாகவும் உடன் அரசை இராஜினாமா செய்யும்படியும் உத்தரவிட்டார். அப்படி முடியாத பட்சத்தில் பக்தியார் அரசை கைதுசெய்யப் போவதாகவும் தெரிவித்தார். எதிர்க்கட்சி ஐக்கியமுன்னணியின் உறுப்பினரான பாசார்க்கான் (MEHDI BAZARGAN) தலைமையில் தற்காலிக அரசை நிறுவினர். பசார்க்கான் 1960 பிற்பகுதியில் ஷாவுக்கு எதிரான நடவடிக்கையில் இறங்கியமையால் 5 வருடம் சிறையிடப்பட்டவராகும். பெப்பரவரி 8ல் இருந்து 11 வரையான நாட்களில் தெஉறரான் வீதிகளில் மில்லியன் கணக்கான மக்கள் தங்கள் வெறுப்பை பக்தியார் அரசிற்கு எதிராக நடத்தியபோது 1000க் கணக்கானோர் கொல்லப்பட்டனர். " இரத்த நாட்கள் " பக்தியார் அரசை இராஜினாமா செய்ய வைத்ததுடன் அரச ஆயுதப்படைகளின் மனோவியலை தகர்த்ததினால் வெகுண்டெழுந்த வெகுஜனங்கள் முன்னால் நிற்கத் திராணியற்று தம் முகாங்களில் பதுங்கிக்கொண்டனர். பசார்க்கான் உடனடியாகத் தன்னுடைய அமைச்சரவையை அறிவித்த அதே காலத்தில் தெஉறரானில் இடதுசாரி கொரில்லா புரட்சியாளர்கள் அமெரிக்கத் தூதுவராலயத்தைக் கைப்பற்றி தூதுவர் WILLIAM SULLIVAN உட்பட நூற்றுக்கு மேற்பட்ட ஊழியர்களைப் பயணக்கைதிகளாக்கினர். பின்னர் இவர்கள் கொமேனியின் புரட்சியாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர். தற்காலி அரசை இயங்கச்செய்ய எண்ணைத் தொழிலாளர்களும் மற்றையோரும் பெப்பரவரி 11ல் வேலைக்குத் திரும்பினர். பல மில்ட்டரிக் கொமாண்டர்கள் உடனடியாகத் தூக்கிலிடப்பட்டனர். அமெரிக்க ஏகாதிபத்தியம் ஈரானின் ரஷ்ய எல்லையில் வைத்திருந்த தனது எலெக்ரோனிக் உலவு இயந்திரங்களைவிட்டு வெளியேற வேண்டியேற்பட்டது.

புரட்சியின்போது பழைய அரச இயந்திரத்தைப் பெயர்த்து, புதிய அரச இயந்திரத்தை பிரதியீடுசெய்ய புரட்சியாளர்கள் தயாராக இல்லாதிருந்தபடியால் பசார்க்கான் அரசை மீறி புரட்சிக்குழு (REVOLUTIONARY COMMITTEE) தூக்கிலிடுவதையும், மக்களைக் கைது செய்வதையும், அதிகாரங்களை உத்தரவிடுவதையும் எழுந்தமானத்தில் செய்தமையால் பசார்க்கான் அரசிற்கு தலையிடியைக் கொடுத்தது. இதன் நிமித்தம் மார்ச் 8ம் திகதி பசார்க்கான் அரசு இராஜினாவைக் கொடுத்தது. ஆனால் கொமேனியின் குழுவினர் அதனை ஏற்றுக்கொள்ளாமல் தன்னிச்சையான புரட்சிக்குழுவின் ஓரளவு கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தது. தோல்வியை சகிக்கமுடியாத அமெரிக்க ஏகாதிபத்தியம் அப்போதுதான் புரட்சியைச் செய்துமுடித்த ஈரானிய புரட்சியை கொட்டிக்குழப்ப குருடிஉந்ஸ்தான் (KURDISTAN) மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தை முடுக்கிவிட்டது.

குருடிஉந்ஸ்தான் மக்களின் நியாயமான போராட்டமானது நொந்துபோயிருந்த ஈரானிய புரட்சியை மேலும் பாதுகாக்கின்ற அதேநேரத்தில் தங்கள் உரிமை வென்றெடுக்க முடியாத நிலைமையை சிருஉந்டித்தது. குருடிஉந்ஸ்தான் மக்களுக்கும் புரட்சிக்குழுவிற்கும் நடந்த பலத்த போராட்டத்தின்பின்னர் அயுத்துல்லா மொகமட் தல்கானி குருடிஉந்ஸ்தானுக்கு வரையறுக்கப்பட்ட சுயாட்சியை (LIMITED AUTONOMY) வழங்குவதற்கு உத்தரவிட்டார். இதன் பிரகாரம் குருடிஉந்ஸ்தான் பாடசாலைகளை அவர்களே இயக்கவும், குருடிஉந்ஸ்தானுக்கான பாதுகாப்புப் படையைத் தேர்ந்தெடுக்கவும் அனுமதி வழங்கிற்று. மார்ச் 30ம் திகதி தேசிய ரீதியான வாக்கெடுப்பின் மூலம் "இஸ்லாமிய குடியரசை"யும் புதிய அமைச்சையும் 97 வீதமானவர்களின் வாக்குகளின்மூலம் உருவாக்கினார்கள். இது பசார்க்கான் அரசை பிரதியீடுசெய்தது. இதன் பின்னர் அமெரிக்க ஏகாதிபத்தியமும், ஸ்ராலிஸ்டுகளும் போலி மார்க்சிசியக் கட்சிகளும் ஈரானைக் குழப்பிக்கொட்டுவதற்கு ஒன்றுகூடின. ஸ்ராலிஸ்டுகள் ஈராக்குடன் 20 வருட ஆயுத ஒப்பந்தத்தைச் செய்து ஈராக்கிற்கு ஆயுதம் கொடுத்ததின்மூலம் புரட்சியை முடித்து அசந்திருந்த ஈரானியக் குடியரசை படுக்கையில்வைத்துக் கற்பழித்தது. அமெரிக்க ஏகாதிபத்தியம் அன்றிலிருந்து இன்றுவரை தொடர்ச்சியாக ஆத்தி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ரமுட்டல் செய்கின்றது. குறிப்பாக ஈராக்கிற்கு ஆயுதம் வழங்கிய, சவுதி அரேபியாவிற்கு எப் 16 விமானங்களையும் வழங்கியதுடன் ஈரான் துறைமுகத்தில் என்ணெயேற்றும் கப்பல்களைத்தாக்கியும் தங்கள் காலாகாலமான பழக்கவழக்கங்களை நடாத்திகொண்டிருக்கின்றன. இவற்றை இன்னொருமுறை எண்ணம் வாசகர்களுடன் பகிர்ந்துகொள்வோம்.

அனைத்து முஸ்லிம் மக்களே!

## நீதியை நிலைநாட்ட ஒன்றுபடுங்கள்!!

இலங்கையில் முஸ்லிங்களாகிய எமது எதிர்காலம் மிகவும் சிக்கலானதும், ஆபத்தானதும் என்பதை கடந்த கால வரலாறு எச்சரிக்கை செய்கிறது. இலங்கையில் முஸ்லீங்களாகிய எமது அரசியல் உரிமைகள் படிப்படியாகப் பறிக்கப்பட்டிருக்கிறது. சிங்களவருக்கும் முஸ்லீம்களுக்கும் இலங்கையில் நடந்த கலவரங்கள் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்தவை. அதன் தொடர்ச்சியும் வளர்ச்சியும் 1976-ல் புத்தளம் பள்ளிவாசலில் எமது சகோதரர்களின் உயிர்கள் பறிக்கப்பட்டன. 1977-ம் கலவரத்தில் பல முஸ்லீம்கள் பாதிப்புக்கு உள்ளாக்கப்பட்டனர். அத்தோடு பல வர்த்தக நிலையங்கள் உடைத்து எரிக்கப்பட்டன. சென்ற சில ஆண்டுகளில் காலியில் நடைபெற்ற பயங்கர நிகழ்ச்சிகள் எமக்கு அச்சத்தை தருகின்றன. அம்பாறை மாவட்டத்தில் எம்மவருடைய காணி பறிக்கப்பட்டன. திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தால் எமது பிரதேசம் பறிபோய்க் கொண்டிருக்கிறது. இவற்றை எல்லாம் ஒப்பிட்டுப்பார்க்கும்போது எதிர்காலத்தில் முஸ்லீங்களாகிய எமது நிலை என்ன என்பது அச்சத்தை உண்டுபண்ணுகிறது.

இந்த நாட்டில் இலங்கைத் தமிழர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளைப் போல் முஸ்லீம்களாகிய எமக்கு ஏற்படும் என்பதற்கு அபாயக் கொடி காட்டப்பட்டுள்ளது. இதன் உச்சக் கட்டமான நடவடிக்கைதான் பாஷித வெறிபிடித்த இஸ்ரேலிய சியோனிஸ்டுகளுக்கு இலங்கையில் அவர்கள் நலங்காக்கும் பிரிவு ஒன்றை இலங்கையில் திறக்கப்படுவதற்கு யூ. என். பி.. அரசாங்கம் அனுமதித்தது.

### ஒற்றுமையும், போர்க்குணமும் மிக்க முஸ்லீம்களே!

விழித்தெழுங்கள்! எமது அரசியல், பொருளாதார, கலாச்சார, பிரதேச உரிமைகளை வென்றெடுக்க, ஒன்றுபடுவோம். எமது அரபுச் சகோதரர்களை அழித் தொழிக்கும் கொலை வெறிபிடித்த இஸ்ரேலையும் அதற்கு துணைநிற்கும் யு. என். பி. அரசின் தவறான நடவடிக்கைக்கு எதிராகவும் போராட ஒன்றுபடுவோம்.

### தமிழ் பேசும் மக்களே!

எமது நியாயமான போராட்டத்திற்கு உங்களது ஒத்துழைப்பைத் தாருங்கள். கொடுமைகளை ஒன்றுபட்டு எதிர்ப்போம்.

**யூன் 11** | **யாழ் குடாநாடெங்கும் பூரண ஹர்த்தால்**

நடாத்தி எமது ஒன்றுபட்ட எதிர்ப்பைக் காட்டுவோம்!

பொதுமக்களே! மாணவர்களே! வர்த்தகர்களே! தனியார் துறையினரே! எம்முடன் இணைந்து போராட்டத்தை வெற்றிகரமாய் நடத்த முன்வாருங்கள்!

ஒன்றுபட்ட எங்கள் போராட்டம் வெல்க!

முஸ்லீம் மக்கள் முன்னணி.



## தோட்டத்தொழிலாளர்

### சர்வதேச புரட்சிக்கட்சி

"பரமசிவன் வந்து வந்து வரம் கொடுத்துப் போவார் பதிவிரதைக் கின்னல்வரும் பழையபடிதீரும்." அரை நூற்றுண்டாக தோட்டத் தொழிலாளர்களது பிரச்சினையை அப்படித் தீர்க்கலாம் இப்படித் தீர்க்கலாமென்று பாராளுமன்றத்திலும் அரசியல் மேடைகளிலும் தொழிற்சங்கக் கூட்டங்களிலும் கலந்துரையாடி வாக்குவாதம் செய்து அப்படி இப்படியெல்லாம் கொக்கரித்துவந்த பலன் என்ன? இலங்கை பாராளுமன்ற வரலாற்றில் ஏறத்தாள அரைவாசி நேரம் தோட்டத் தொழிலாளர் பிரச்சினை விவாதிக்கப்பட்டது. ஈற்றில் தோட்டத் தொழிலாளர்களது முடிசூடா மன்னனான எஸ். தொண்டமானுக்கு மந்திரிப் பதவி கொடுக்கப்பட்டது. நடந்தது என்ன? இருந்ததையும் கெடுத்தானாம் இளையதம்பி மேத்திரி கதையாகிறது.

தொண்டமானை விழுங்கி மந்திரியாக ஏப்பம் விட்ட யூ.என்.பி அரசாங்கம் நட்சாவைக் கக்கலாகக் கக்கியது, NADSA (NATIONAL AGRICULTURAL DIVERSIFICATION AND SCIENTIFIC AFFAIRS) தேசிய விவசாய விரிவாக்கமும் விஞ்ஞானமும் என்ற உலக வங்கியால் நிதி வழங்கப்பட்டு இலங்கையிலே உண்டாக்கப்பட்ட ஒரு ஸ்தாபனமாகும். அந்த அமைப்பிலே சதிகாரர்களை உருவாக்குகின்ற கவாட் யூனிவர்சிற்றி பொறியியலாளர்கள் ஆலோசகர்களாக அமர்த்தப்பட்டார்கள். அவர்களது தங்க மூளை இலங்கையில் தேயிலை வளர்த்தல் இலாபகரமானதல்லவென்றும், முசுக் கொட்டைச் செடிவளர்த்தல் இலாபகரமானதென்றும் கண்டுபிடித்தது. நட்சா உலகவங்கி அமைப்பாதலால் அதன் பிரேரணைகள் உடனேயே அமுலாக்கப்பட்டன. இலங்கையின் தேயிலை பொருளாதாரத்திற்கு ஆப்புவைக்கப்பட்டது. தோட்டங்கள் மூடப்பட்டு முசுக்கொட்டைச் செடிவளர்த்தல் ஆரம்பமாகியது. இத்தோட்டங்களில் வேலை செய்வதற்கு விவசாயப் பாடசாலைகளில் கல்வி பயின்று வேலையற்றிருந்த ஒரு பகுதியை நட்சா எடுத்துக்கொண்டது. தோட்டத் தொழிலாளர்கள் மேலும் இன்னலுக்குள்ளாக்கப்பட்டனர்.

இலங்கையின் தேயிலைப் பொருளாதாரம் நட்டம் போகத் தொடங்கியதால் இலங்கையின் தோட்டத்தொழிலாளர்கள் சுரண்டுதலுக்கு லாயக்கற்ற மாற்றுக் சுமையாகத் தொடங்கினர். இவர்களைப் பூண்டோடு கொல்லியெறியும் சதியை அரசாங்கம் மேற்கொள்ளத் தொடங்கினர். 1981 எம்பிலிப்பிட்டிய கடதாசியாலையில் இரு சிங்களவர்களைக் கொன்று ஆத்திரமூட்டலைத் தொடர்ந்து இரத்தினபுரி பிரதேசத்திலுள்ள தோட்டத் தொழிலாளர்களை துரத்தும் முயற்சியை அரசாங்கம் மேற்கொண்டது. பல நூறுபேர் கொல்லப்பட்டு சில ஆயிரம்பேர் பாதுகாப்பாக இந்தியா சென்றும் தோட்டத் தொழிலாளர்கள் மீண்டும் அழித்தொழிக்கப்பட முடியாத ஒரு சமுதாயமாக மிஞ்சியிருந்தனர். தோட்டத் தொழிலாளர்களுக்கு மேல் ஏற்படுத்தப்பட்ட ஒவ்வொரு தாக்குதல்களும் பக்கவிளைவாக இலங்கைப் பொருளாதாரத்தை மேலும் வீழ்த்தியும் ஒட்டுமொத்த இலங்கை மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேலும் கீழே தள்ளியும் மிஞ்சியிருந்த ஜனநாயக உரிமைகளையும் எடுத்துச்சென்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1949ல் தோட்டத் தொழிலாளர்கள் பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை இழந்தனர். 1977ல் தொழிலாளவர்க்கக் கட்சியொன்றுமே பாராளுமன்றம் செல்லமுடியாமல் போனது. 1983ல் இலங்கைத் தமிழர்கள் பாராளுமன்றத்தில் இருக்கமுடியாமல் போயிற்று. 1947லிலே தோட்டத் தொழிலாளர்கள் கூப்பனை இழந்தனர். 1977ல் இலங்கையரான அத்தனை பேரும் கூப்பனை இழந்தனர். 1949ல் தோட்டத் தொழிலாளர்கள் தேர்தலிலே பங்குகொள்ளும் உரிமையை இழந்தனர். 1983ல் இலங்கையில் பொதுத் தேர்தலே இல்லாமல் போய்விட்டது. இவைகளெல்லாம் தற்செயல் நிகழ்ச்சிகள் அல்ல. தோட்டத் தொழிலாளர்களது ஜனநாயக உரிமைகளை மீட்டெடுப்பதுபற்றிய பிரச்சினையிலே இலங்கையின் மற்றைய தொழிலாள வர்க்கத்தட்டுகள் போதிய அக்கறை காட்டாமையினால் இன்று இலங்கையில் உழைக்கும் மக்கள் அத்தனைபேரும் உரிமைகளிலே தோட்டத் தொழிலாளர்கள்போல் ஆகிவிட்டார்கள்.

இலங்கையிலுள்ள தொழிலாள வர்க்கக் கட்சிகள் அத்தனைக்கும் தத்துவமும் நடைமுறையும் போதாமல் இருந்தது தோட்டத் தொழிலாளர்களைத் தங்களது கட்சிக்கு வென்றெடுப்பதற்கு. இலங்கைத் தொழிலாள வர்க்கத்தின் ஆணிவேர் தோட்டத் தொழிலாளர்களாக இருக்கும் பொழுது அவர்களை உதாசீனம் செய்து எவ்வாறு புரட்சியைச் செய்யமுடியும். ஏனெனில் இலங்கைப் பொருளாதாரத்தில் அடிப்படையே பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையாதலால் இலங்கைத் தொழிலாள வர்க்கத்தின் அடிப்படையும் தோட்டத்தொழிலாளர்களே. தோட்டத் தொழிலாளர்கள் கிளர்ந்தெழுந்து புரட்சியின் ஜீவ மரணப்பங்கை ஏற்காமல் இலங்கையின் பொருளாதார மேற்கட்டுமானம் குலுங்காது.

தோட்டத் தொழிலாளர்களது கிழடுதட்டி விறைத்துப்போன (Cyndicalism) தொழிற்சங்கவாத அரணை இலங்கையில் இதுவரைவந்த தொழிலாள வர்க்கக் கட்சிகள் எதனாலும் உடைத்தெறிய முடியவில்லை. இலங்கையிலே தோட்டத் தொழிலாளர்களை புறநீங்கலாக்கி ஒரு சுபீட்சம் ஒருநாளும் வரப்போவதில்லை. அதனால் இலங்கையிலே சுபீட்சம் மலர வேண்டுமெனில் தோட்டத் தொழிலாளர்களை, புரட்சிக்கட்சிக்கு வெல்லவல்ல மிகக் கூர்மையான தத்துவார்த்தச் செழுமையும் ஒரு நிமிடத்தையும் வீணாக்காத நடைமுறைச் சம்பிரதாயமும் உள்ள ஒரு புரட்சிக் கட்சியினாலே முடியும். கூர் மழுங்கிய ஆயுதங்களால் சிந்திக்காவிசத்தை உடைத்தெறியமுடியாது. இங்கிலாந்து சிந்திக்காவிசத்தை இன்றுவரை ஒரு கட்சியாலும் உடைத்தெறிய முடியவில்லை.

தோட்டத் தொழிலாளர்களை தமிழீழத்தில் வந்து குடியேறும்படி வாயளவில் பல விடுதலை இயக்கங்கள் கூறுகின்றன. அவர்களால் ஒரு தோட்டத்திலே இன்றுவரை காலடியெடுத்துவைக்க முடியவில்லை. ஏனெனில் ஒரு தோட்டத் தொழிலாளி விடுதலை இயக்கத்திற்கு வென்றெடுப்பதற்கு ஆயிரம் ஆமிக்காரரைக் கொல்லுவதற்கு செலவழிக்கும் சக்தியை செலவழிக்க வேண்டும். அவர்கள் யாழ்ப்பாண தமிழ் இளைஞர்கள்போல ஊதாரிகள் அல்லர். அவர்கள் காலம் காலமாய் யாழ்ப்பாணத்து மக்களைப் போல தனி மனித வாதிகளாய் (induvidualist) இருந்ததில்லை. அவர்கள் தொழிற்சங்க ரீதியில் இறுக்கமாக அணிவகுக்கப்பட்டவர்கள். மிக வைராக்கியமானவர்கள். மிகுந்த பொறுமைசாலிகள்.



கியூபாவிலே புரட்சி நடைபெற்றதையடுத்த லத்தீன் அமெரிக்கா முழுவதிலும் கொரில்லாயிசமும் காஸ்ரோவாதமும் தொத்தத் தொடங்கின. அவை பேருவிலே யுந்தா அரசாங்கம் ஏற்பட்டதோடும் பொலியாவிலே மில்ட்டரி சதிக்குமே வழிதிறந்து விட்டன. முழு லத்தீன் அமெரிக்காவிலும் ஒரு நாடுமாறி மற்ற நாட்டிலே காஸ்ரோவாதம் தோல்வி கண்டது. தொழிற்சங்கரீதியில் காலம்காலமாக அணிவகுக்கப்பட்ட தொழிலாளர்கள் அசைந்து கொடுக்கவில்லை. ஈற்றில் மெச்சிக்கோவிலுள்ள மாணவர்கள் ஆயிரக்கணக்கில் கைதுசெய்யப்பட்டபொழுது பிடில்காஸ்ரோவை மவுனம் சாதிக்க வைத்தது. ஈற்றில் முழு லத்தீன் அமெரிக்க நாடுகளிலுமே வலசாரி அரசாங்கங்கள் வந்தன. காஸ்ரோவின் கொரில்லா மூலோபாயம் கியூபாவைத் தவிர்ந்த எல்லா நாடுகளிலுமே தோல்வி கண்டதோடு மட்டுமல்ல ஈற்றில் இங்குள்ள அதிகமான அரசாங்கங்களோடு காஸ்ரோ உடன்பாட்டுக்குச் சென்றார். கூர் மழுங்கிய அரசியல் ஆயுதங்கள் காலம்காலமாக ஊதாரிகளாய் வாழ்ந்த மக்கள் மேல் செல்லக்கூடும். ஆனால் அது தொழிலாள வர்க்கத்தின்மேல் செல்லப் போவதில்லை. தோட்டத் தொழிலாளர்களை வென்றெடுக்க வேண்டுமானால் மாக்ஸிச லெனிஸம் வேண்டும். கொரில்லாயிசமும் காஸ்ரோயிசமும் செல்வநாயகஇசமும் அவர்கள் முன் அழியப்போவதில்லை.

தோட்டத் தொழிலாளர்களது சுபீட்சமானது ஓர் சர்வதேசப் புரட்சிக்கட்சியோடு சங்கமமாவதோடு மட்டும்தான் தீர்க்கப்படும். அன்றுவரை அவர்களது வாழ்க்கை கண்ணீரும்கம்பலையுமாகப் போராட்டங்களும் காட்டிக்கொடுப்புகளுமாகவே கழியும். இலங்கைத் தொழிலாள வர்க்கத்திற்கும், இந்தியத் தொழிலாள வர்க்கத்திற்கும் விமோசனம் கிடைக்கும்வரை தோட்டத் தொழிலாளர்களுக்கு விமோசனமில்லை. உலகத் தொழிலாள வர்க்கத்திற்கு விமோசனம் கிட்டும்வரை தோட்டத் தொழிலாளர்களுக்கு விமோசம் கிட்டப்போவதில்லை. இதன் மறுதலையுமே வாஸ்தவமானது. இலங்கையிலுள்ள தோட்டத் தொழிலாளர்களுக்கு விமோசனம் கிடைக்கும்வரை இலங்கைத் தொழிலாளர்களுக்கு விமோசனம் கிட்டப்போவதில்லை. தோட்டத் தொழிலாளருக்கு விமோசனம் கிட்டும்வரை உலகத் தொழிலாளர்கள் வெற்றிவாகை சூடமாட்டார்கள்.

(இக் கட்டுரை இந்த இதழில் முற்றுப்பெறுகிறது)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





SCHLOSSPLATZ_STUTTGART, 30.06.84.

# நிக்கரகுவா புரட்சியை பாதுகாப்போம்

- 1979 ஆம் ஆண்டிலே அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு மரண அடி கொடுத்து தமது உறுதி மிக்க போராட்டத்தால் தமது அடிமை விலங்கையொடித்த நிக்கரகுவா மக்களின் மேல் அமெரிக்க ஏகாதிபத்தியம் தனது சதிகளை மீண்டும் முடுக்கி விட்டுள்ளது.
- நிக்கரகுவாவின் துறைமுகங்களை C.I.A. யின் ஆழ் கிண்டுகொளால் தகர்க்கப் படுகின்றது. இதனால் நிக்கரகுவாவின் ஏற்றுமதி, இறக்குமதி தடைப்படுகின்றது.
- நிக்கரகுவாவின் எதிர்ப்புரட்சியாளன் EDEN-PASTORA-GOMEZ இன் தலைமையிலே 8,000 கூலிப்பட்டாளங்களை உள்ளடக்கிய போராளியொன்று நிக்கரகுவாப் புரட்சியை முறியடிக்கத் தயாராகின்றது.
- கௌதமாலா, ஹொண்டுராஸ் எல்லைகளிலே நிக்கரகுவாப் புரட்சியை முறியடிக்கும் எதிர்ப்புரட்சி கொரில்லாக்கள் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நவீன ஆயுதங்களுடன் இனிக்கப்படுகிறார்கள்.
- இவ்வாறான எதிர்ப்புரட்சி நடவடிக்கைகளை முறியடித்து புரட்சியை பாதுகாக்க உலகின் ஒடுக்கபபட்ட மக்களும், முற்போக்குத் தலைமைகளும், தொழிற் சங்கங்களும் முன்வந்துள்ளன.



- கடந்த 30-06-1984 இல் மே. ஜேர்மனியில் STUTTGART நகரிலே நிக்கரகுவாப் புரட்சியை காப்பாற்ற 200,000 டொய்ச் மார்க்குகள் சேர்க்கப்பட்டன. இதில் ஒரு பகுதி எல்சல்வடோர் போராளிகளுக்குமாகும்.
- 30-06-1984 இல் STUTTGART நகரிலே மத்திய அமெரிக்க போராட்டங்களை ஆதரித்தும், அமெரிக்க ஏகாதிபத்திற்கு எதிராகவும் மாபெரும் ஊர்வலமும் நடைபெற்றது.
- ஊர்வலத்தில் தமிழ் ஈழ சர்வதேச சம்பந்தக் குழுவும், தமிழ் ஈழ மக்கள் விடுதலைக் கழகமும் (PLOT) கலந்து கொண்டு ஒடுக்கப்பட்ட நிக்கரகுவா மக்களுடனான தமிழ் மக்களது சொலிடாரிற்றியை வெளிப்படுத்தினர்.
- இவ்வூர்வலத்தின் இறுதியில் குழப்பம் விளைவிக்கும் வகையில் ஜேர்மன் பொலிசார் நடந்து கொண்டனர். (படம் மேலே)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ் ஈழ விடுதலை இயக்கம்

## தமிழ் ஈழ விடுதலை இயக்கம்
## Thamil Eelam Liberation Organization

TELO

# இஸ்ரேலிய சியோனிசத்திற்கெதிரான ஒடுக்கப்பட்ட முஸ்லீம் மக்களின் போராட்டம் வெல்க!

இன்று அமெரிக்கஏகாதிபத்தியத்திற்கு இலங்கைத்தீவை அடகு வைப்பதன் மூலம் இந்து சமுத்திரத்தில் ஒரு போர்ப்புயலை ஸ்ரீலங்கா தரகு முதலாளித்துவ அரசு எழுப்பியிருக்கிறது: இலங்கைத்தீவின் திரிகோணமலைத் தளத்தின்மீது குறிவைத்துப் பறக்கும் அமெரிக்க கழுகு, அதன்மூலம் இந்தியாவிற்கு பாதுகாப்பு அச்சுறுததலை ஏற்படுத்த முனைகிறது. இந்நிலையில் சியோனிஸ இஸ்ரேலிய அரசும் அதன் இராணுவ ஆலோசகர்களும் ஸ்ரீலங்காவில் காலூன்று வதை ஜே.ஆரின் தரகு முதலாளித்துவ அரசு வரவழைத்து இடம் கொடுத்துள்ளது.

பல இலட்சம் அரபு மக்களை நரவேட்டையாடி அம்மக்களை இன்று தாயகத்தை இழந்து அகதிக் கூட்டங்களாக நாடு, நாடாக விரட்டிய மனித இனத்தின் அவமானச் சின்னமான சியோனிஸ அரசாங்கத்தை ஸ்ரீலங்காவிற்கு அழைத்ததினமூலம் அம்மனித விரோதிகளுக்கு தாமும் சளைத்தவர்களல்ல என்பதை உலக நாடுகளுக்கு உணர்த்தியுள்ளது அதிஉத்தமரின் சியோனிஸ அரசு.

இஸ்ரேலினது தூதுவராலயம் அமைவதை எதிர்த்து குரல்கொடுத்த அரபு நாடுகளின் கோரிக்கைகளையும் ஈழம வாழ் முஸ்லிம் மக்களின் நியாயப்பூர்வமான கோரிக்கையை புறக்கணித்து அவ் சியோனிஸ அரசுக்கு தூதராலயம் ஏற்படுத்துவதற்கு பகிரங்கமாக அனுமதி கொடுத்ததின்மூலம் அரபு மக்களுக்கு எதிரான தனது போராட்டப் பங்கை நிலைநிறுத்தியுள்ளது.

இச்செயல்மூலம் இந்துமா சமுத்திரப் பிராந்தியத்திற்கு மட்டுமல்ல, அரபு மக்களின் பாதுகாப்புக்கும்பேராபத்து விளைவிக்கும் ஸ்ரீலங்கா அரசின் நடவடிக்கைகளை முஸ்லீம் மக்கள் கவனத்திற்கொள்ளாது விடுவீர்களேயானல் உங்கள் சகோதர அரேபிய மக்களுக்கு துரோகம் புரிந்தவர்களாவீர்கள்.

இலங்கைத்தீவில தமிழ்மக்கள் காலம் காலமாக ஸ்ரீலங்கா இனவெறித் தாக்குதல்களை சந்தித்ததுபோல முஸ்லீம் சகோதரர்களும் சிங்கள இனவெறித் தாக்குதல்களுக்கு முகாம் கொடுப்பது வரலாற்று உண்மை 1914ல் ஏற்பட்ட சிங்கள-முஸ்லீம் இனக்கலவரமும் புத்தளம் பள்ளிவாசலில் நடந்த பேரினவாத படுகொலைகளும் காலியில் நடந்த கலவரங்களும் முஸ்லீம் மக்கள் மீதான பேரினவாத தன்மையை நிதாசனமாக்குகின்றது.

அமெரிக்க ஏகாதிபத்தியம் இஸ்ரேல்மூலம் உலகெங்கும் நடத்தும் ஆயுத மிரட்டல் களுக்கும் நவகாலனித்துவ போக்கிற்கும் இலங்கைத்தீவும் ஆட்பட்டுவிட்டது. இச் ஸ்ரீலங்கா சோவானிஸ அரசை நிர்மூலமாக்குவதனமூலமே இந்துமாகடல் பிராந்தியத்தில் வீசிவரும் போர்ப்புயலை நிறுத்த முடியும். மேலும் உலகமுஸ்லீம் சமுதாயத்தின் விரோதியான இஸ்ரவேலின் ஆக்கிரமிப்பை முறியடிக்கலாம். தமிழீழ விடுதலை இயக்கம் ஸ்ரீலங்கா, சோவனிஸ அரசுக்கும் அதன் கூட்டாளியான இஸ்ரவேலுக்கு ஏன் உலக விழுங்கியான அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கும் தகுந்த பதிலடி வழங்கத்தான போகிறது இஸ்ரவேலின் ஊடுருவலை எதிர்த்து குரல்கொடுக்கும் உலக முஸ்லீம் சமுதாயத்திற்கு முற்று முழுதான ஆதரவை ரெலோஸ்டுக்கள் என்றும் வழங்குவர்.

ஸ்ரீலங்கா, சோவனிஸ அரசுக்கு துணைபோகும் சகல பிற்போக்கு சக்திகளையும் முறியடித்து வெற்றி காண்பது ஆயுதம் தாங்கிய வெகுஜன போராட்டத்தில் தமிழீழ விடுதலை இயக்கத்துடன் பங்கெடுப்பதனமூலமே சாத்தியமாகும்.

ஏகாதிபத்திய மனித வெறி மிருகங்களை அவர்களின சவப்பெட்டிகளுடன் திருப்பி யனுப்ப எமது மனித உரிமைக்கான புனிதப் போராட்டத்தில் குதிக்குமாறு முஸ்லீம் சமுதாயத்தை வலியுறுத்துகின்றோம்.

"என்றும் எமது தலைவன் தங்கத்துரை கொள்கைக்குன்றம் குட்டிமணி"

அரசியற் குழு,
தமிழ் ஈழ விடுதலை இயக்கம்

இப்பிரசுரம் பிரச்சார வெளியீட்டுப் பிரிவினரால் 24—06—1984 அன்று வெளியிடப்பட்டது.



# ஆக்கிரமிப்பாளரை ஒன்றுபட்டு தோற்கடிப்போம்!

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி
EPRLF

உலக மக்களின் பொது எதிரியான சியோனிச இஸ்ரேலிய அரசுடன் எமது போராட்டத்தினை நசுக்குவதற்காக, அமெரிக்க ஏகாதியத்தியத்தின் ஏவல் நாயான ஸ்ரீலங்கா இனவெறி அரசு கரம் கோர்த்துள்ளது.

ஈழவிடுதலைப் போராட்டத்தை நடாத்துகின்ற நாம் ஸ்ரீலங்கா இனவெறி அரசுக் கெதிராக மட்டுமன்றி அமெரிக்க ஏகாதியத்துக்கும், சியோனிச இஸ்ரேலிய அரசுக்கும் எதிராயும் போராட வேண்டியது,

தவிர்க்கப்பட முடியாத எமது பணியாக அமைந்துள்ளது!

இன்நிலையில் சர்வதேச பயங்கரவாதியான சியோனிச இஸ்ரேலிய அரசுக்கெதிராயும் அத்துடன் கைகோர்க்கும் ஸ்ரீலங்கா அரசுக் கெதிராயும் முஸ்லீம் மக்கள் தங்கள் போராட்டக் கரங்களை உயர்த்தியுள்ளனர்.

போராட்டக் கரங்களை உயர்த்தியுள்ள முஸ்லீம் மக்களுடன், எமது போராட்டக் கரங்களை குலுக்கிக் கொள்வோம்!

பொது எதிரிக்கெதிராக ஒன்றுபட்டு போராடுவோம்!

தமிழ்—முஸ்லீம் மக்கள் ஒற்றுமை வளரட்டும்!!

ஆக்கிரமிப்பாளர்களை ஒன்றுபட்டு தோற்கடிப்போம்!!!

யூன் 11

பூரண ஹர்த்தால்

சியோனிச இஸ்ரேலிய அரசுக் கெதிரான எதிர்ப்பை காட்டுமுகமாக முஸ்லீம் மக்கள் விடுத்துள்ள ஹர்த்தால் கோரிக்கையை ஏற்று சகல மக்களும் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு வேண்டுகின்றோம்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (E. P. R. L. F.)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வேண்டுகோள்

தோழர்களே

ஜனாதிபதி ஜயவர்த்தனா தென்கொரியா, ஜப்பான், சீனா, அமெரிக்கா போன்ற எதிர்ப்புரட்சி அரண்களினுட் புகுந்து வெளிவந்துள்ளார். வெள்ளை மாளிகையில் அமெரிக்க ஜனாதிபதி ரேகனால் சிறப்பு விருந்து கொடுத்து கௌரவிக்கப்பட்ட ஜயவர்த்தனா தமிழீழ போராளிகளை பயங்கரவாதிகளென பட்டம் சூட்டியுள்ளதுடன் பயங்கரவாதமானது இலங்கையின் ஒட்டுமொத்த சர்வதேச பிரச்சனையாகிவிட்டதென்றும் இலங்கையில் ஜனநாயகம் வடபகுதி தீவிரவாதிகளால் அபாயத்துக்குள்ளாகியதென்றும் கூறியுள்ளார். மார்க்சிய அரசொன்றை நிர்ணயிப்பதே வடபகுதி தீவிரவாதிகளின் நோக்கம் என தமிழ் ஈழப் போராட்டத்தின் புரட்சிகரத் தன்மையை கொச்சைப்படுத்தியுள்ள ஜயவர்த்தனாவை பாராட்டிப்பேசிய அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தலைவரான ரேகன் பயங்கரவாதத்தை முறியடிக்கும் இலங்கை அரசின் முயற்சிகளுக்கு அமெரிக்க அரசின் ஆதரவு என்றும் உண்டு என்பதை தெளிவுபடுத்தியுள்ளார்.

இலங்கையிலோ, தமிழ் ஈழ மண்ணிலோ கொழுந்துவிட்டெரியும் விடுதலைத் தீயானது அணைத்துத் தீவிலும் அதன் நாக்குகளை நீட்டி விட்டுள்ளது. தென்னிலங்கையில் ஆயுதப்படைகளுக்கெதிரான போராட்டங்கள் அங்கொன்றும், இங்கொன்றுமாக வெடித்துக் கிளம்பியுள்ளன.

இவ்வாறான நிலைமைகளில் சோஷலிச தமிழீழத்தை நோக்கிய தமது நெடிய போராட்டத்தில் நடைமுறைத் தடைகளால் தமிழ் ஈழ விடுதலை இயக்கங்கள் சூழப்பட்டுள்ளன. இந் நடைமுறைத் தடைகளின் வெளிப்பாடாகவே "தமிழ் ஈழ சர்வதேச சம்பந்தக் குழுவின் மார்க்சிய இலக்கியமான **எண்ணம்** பத்திரிகையை வெளிக்கொண்டு வருவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

விடுதலையின்பால் மக்கள் ஈர்க்கப்பட்டு, வரலாற்றில் முன் என்றும் காணாத அளவுக்கு அரசியல் ஆர்வமும், கருத்தாய்வும் பக்குவமும் பெற்றுள்ள இவ்வேளையில் மக்களை ஸ்தாபன ரீதியாக அணிவகுக்க இன்றைய நாள்வரை செயல் பட்டு வந்த மார்க்சிய இலக்கியமான **எண்ணம்** நிதி நெருக்கடியின் காரணமாக தொடர்ச்சியாக வெளிவர முடியாத நிலை உருவாகியுள்ளது.

இவ்வாறான ஒரு நிலைமையை தொடர்ந்து தமிழ் மக்கள் அனுமதித்துக்கொண்டு விடுதலைக்காக தொடர்ந்து இயங்க முடியாதென்பதை எமது தோழர்களாகிய நீங்கள் உணர்ந்து கொள்வீர்களென உறுதியாக நம்புகின்றோம்.

புரட்சிகர மார்க்சிய இலக்கியங்கள் தமிழ் மக்கள் கைகளில் தவழ்ந்து ஏகாதிபத்தியத்திற்கு எதிராக ஒருமுகப்பட்ட போராட்டத்தில் தம்மை ஈடுபடுத்தவேண்டிய ஓர் போராட்டக்காலகட்டத்தில் **எண்ணம்** பத்திரிகை நிதி பற்றாக்குறையினால் தடங்கலுக்குள்ளாவது UNP அரசாங்கத்திற்கும், ஏகாதிபத்தியத்திற்கும் அளவிக்கும் இடைவெளியையே ஏற்படுத்திக் கொடுக்கும் என்பதை புரிந்துகொள்வீர்கள்.

**எண்ணம்** பத்திரிகையை மேலும் தகவல்கள் அடங்கியதாகவும், புரட்சிகர தத்துவ செழுமை நிறைந்ததாகவும், அணிவகுப்புச் செயல்திறன் கூடியதாகவும் வெளிக்கொணரத் தேவையான நிதியை சேகரித்து அனுப்புங்கள்.

எமது உடனடித் தேவை 3,000 D.M ஆகும்.

உங்கள் பணத்தை கீழ்காணும் வங்கி கணக்கிற்கு அனுப்பி வையுங்கள்

நன்றி

Y. MAHADEVA
A/C. 9037854
DEUTSCHE BANK
7000 STUTTGART. 1
W. GERMANY

www.tamilarangam.net

## முதலாளித்துவம் ஏன் நெருக்குவாரத்தில்

## நிதிமூலதனம்:

நாம் வாழும் சகாப்தம் ஏகாதிபத்திய சகாப்தமாகும். இச் சகாப்தத்தின் தனி இயல்புகளே இன்று சர்வ வியாபகமாகி விட்ட விலைவாசியுயர்வு, வாழ்க்கைத்தர வீழ்ச்சி, வேலையில்லாத்திண்டாட்டம், வீடில்லாத்திண்டாட்டமாகும். இவ் ஏகாதிபத்திய சகாப்தத்தின் இயல்புகளை நாம் புரிந்து கொள்ள வேண்டுமானால் ஏகாதிபத்தியம் பற்றிய லெனினது பகுத்தாய்வு இன்றியமையாததாகும். "ஏகாதிபத்தியமும் சோஷலிசத்தில் பிளவும்" என்ற நூலிலே லெனின் ஏகாதிபத்தியத்தியத்தின் இயல்புகளை பின்வருமாறு விளக்குகின்றார்:

"ஏகாதிபத்தியமானது முதலாளித்துவத்தின் தனியொரு வரலாற்றுக் கட்டமாகும். அதன் தனித்தன்மை மூன்று வகைப்பட்டது. ஏகாதிபத்தியமானது (1) ஏகபோக முதலாளித்துவமாகும். (2) புல்லுருவித்தனமான அல்லது அழுகத் தொடங்கி விட்ட முதலாளித்துவமாகும். (3) அந்திம கால முதலாளித்துவமாகும். தடையற்ற போட்டி நீக்கப் பெற்று அதற்குப் பதிலாய் ஏகபோகம் வளர்ச்சியுறுவதானது ஏகாதிபத்தியத்தின் அடிப்படைப் பொருளாதார இயல்பு, அதன் சாரப் பொருள்"

"முதலாளித்துவமானது ஏகாதிபத்தியமாக வளருகின்ற போக்கிலே சில மாற்றங்கள் ஏற்பட்டன. 1. சிறிய சிறிய தொழில் துறைகள் தமக்கிடையேயான போட்டியை விலக்கிக் கொள்ள தமக்குள் ஒப்பந்தங்களை செய்து ஏகபோக தொழில் துறையாக (கார்ட்டல்கள், சிண்டிகேட்டுகள், டிரஸ்டுகள்) வளர்ச்சியுற்றன. 2. நூற்றுக்கணக்கான சிறிய வங்கிகள் இரண்டு, மூன்று பாரிய வங்கிகளால் இடம் பெயர்க்கப்பட்டது. இப்பாரிய வங்கிகள் பின்னர் நாட்டின் பொருளாதார வாழ்வு அனைத்தையுமே தமது பிடியில் கொண்டு வந்தன. 3. மூலப்பொருள் raw materi- als )களுக்கான ஆதாரங்களை நிதிமூலதனம் தமது பிடியில் கொண்டு வந்து விடுகின்றது" - "நிதிமூலதனம்" என்பது வங்கி மூலதனத்துடன் இணைந்த ஏகபோக தொழில் துறை மூலதனமாகும். இந்த நிதிமூலதனத்தை ஆளுபவர்கள் நிதி ஆதிக்கக்குழு ( Financial Oligarchy ) என அழைக்கப் படுகின்றனர்.

ஏகாதிபத்திய நாடுகளுக்கிடையே ஏற்பட்ட முதலாவது, இரண்டாவது உலகப் போர்கள் காலனிகளைக் கைப்பற்றும் போராட்டமாக, சந்தை பிடிக்கும் போராட்டமாகவே அமைந்தது. அன்றைய நிலைமைகளில் ஏகாதிபத்திய நாடுகளுக்கிடையேயான பிளவுபட்ட தன்மையும் வர்த்தகப் போட்டா போட்டியும், இராணுவ தீர்வுக்காக வழி திறந்து விடவே இரண்டு உலக யுத்தங்கள் நடை பெறலாயிற்று. இந்த யுத்த காலங்களில் முதலாளித்துவ அமைப்பு முறையை தகர்க்க முயன்ற தொழிலாளவர்க்கம் ரஷ்யா முதல் சீனா ஈறாக சோஷலிசப் புரட்சியை நிர்மாணித்தது.



இன்று ஏகாதிபத்தியத்திற்கு ஏற்பட்டுள்ள நெருக்கு-வாரமானது முன்பு உலக யுத்தத்திற்கு மட்டுமே வழியைத் திறந்து விட்டுள்ளது. முந்தைய இரண்டு யுத்தங்களிலும் தமக்குள் சிண்டு பிடித்து முரண்பட்ட ஏகாதிபத்திய நாடுகள் NATO போன்ற அமைப்புகளில் ஒரு மாபெரும் எதிர்புரட்சி சக்தியாக மாறியிருப்பதும், ஏகாதிபத்திய நாடுகளின் நிதி ஆதிக்கக் குழுக்கள் சர்வதேச நாணய சபை, உலக வங்கி போன்ற அமைப்புகளை ஏற்படுத்தி மூலதன ஏற்றுமதியையும் சுரண்டல் வீதத்தையும் கூட்டாக நிர்மாணிப்பதும் இன்றைய சகாப்தத்தின் தனிச் சிறப்பாகும். இதன் காரணமாக இக் கட்டத்தில் ஏகாதிபத்தியங்களின் கூட்டான ஓர் எதிர்ப்புரட்சி அணியானது தனது ராணுவ பலத்தின் மூலம் உலகின் மூலை முடுக்கெங்குமுள்ள தொழிலாள வர்க்க, தேசிய விடுதலைப் போராட்டங்களை நசுக்கிவருகின்றது.

இந்த ஏகாதிபத்திய கூட்டு அணியின் தலைவனும், பெரும் பகுதி நிதிமூலதனத்தின் சொந்தக் காரனும், ராணுவ அரக்கனும் அமெரிக்க ஏகாதிபத்தியமாகும். இதன் காரணமாகவே அமெரிக்க நிதிமூலதனத்தின் வளர்ச்சியும், தேய்வும் சர்வதேச அரங்கிலே பல பொருளாதார, அரசியல், சமூக ஏற்றத் தாழ்வுகளை ஏற்படுத்துகின்றது. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ராணுவ பலத்திலே ஏற்படும் வளர்ச்சியும், தேய்வும் இவ்வாறே சர்வதேச அரங்கை, சர்வதேச சமூகத்தை பாதிப்புக்குள்ளாக்குகின்றது.

அமெரிக்க நிதிமூலதனத்தின் வளர்சியையும், தேய்வையும் அமெரிக்க ராணுவத்தின் வளர்ச்சியையும், தேய்வையும் புரிந்து கொள்ளாமல் ஜயவர்த்தனு அரசாங்கத்தின் பலத்தையும் பலவீனத்தையும் புரிந்து கொள்ள முடியாது. தமிழீழப் போராட்டத்தினை சோஷலிசப் புரட்சியாக முன்னெடுத்துச் செல்வதாக கூறுகின்ற எமது இளைஞர்கள் தமது சிந்தனையை இலங்கையின் எல்லைக்குள்ளும், இந்திய உபகண்ட எல்லைக்குள்ளும் நடமாடவும் நர்த்தனம் புரியவும் விட்டுக் கொண்டு சர்வதேச அரசியல் அரங்கின் திரைகளை அடறுத்துப் பார்க்க முனையாது விடுவதானது தமிழீழப் புரட்சியை பங்காளதேஷ் பாணியில் எதிர்ப்புரட்சி சக்திகளிடம் தாரை வார்க்கவே வழி வகுக்கும்.

(தொடரும்)

## தொடர்புகட்கு

போன்: 0711-6498518 V. MAHADEVA
Thamil Eelam International Liaison Committee
P.O.Box 2004, 7030 Böblingen
West Germany



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ARGENTINES PROTESTING AUSTERITY MEASURES PROPOSED BY THE IMF

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்